# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

சகோ. காலேப் யோசுவா
Tele : 04630 - 256157

"ஓரேப்"
திருவைகுண்டம் - 628 601.
தூத்துக்குடி மாவட்டம்.

## யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்

## முகவுரை

1. மறைபொருள்களை வெளிப்படுத்துகிற பரலோகத்தில் இருக்கிற தேவன், வெளிப்படுத்தப்பட்டவைகளை நாம் காணும்படிக்கு நமக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவும், வேதவாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி நம்முடைய மனதைத் திறக்கவும் வேண்டுமென்று இந்த செய்தித் தொகுப்பை வாசிக்கும் நீங்கள் என்னுடன் வேண்டிக்கொள்ளுங்கள். இந்த செய்தித் தொகுப்பில் வெளிப்படுத்தின விசேஷத்தின் முகவுரையாக முதல் மூன்று வசனங்களை நாம் வாசித்து, தியானிக்கும்போது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவும், வரப்போகிற காரியங்களை அறிவிக்கிற சத்திய ஆவியாகிய அவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்திச் செல்லவும் ஜெபியுங்கள்.
பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக. ஆமென்.

2. சீக்கரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம். வெளி.1:1.
இவன் தேவனுடைய வசனத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியைக் குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான். வெளி.1:2.
இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள். காலம் சமீபமாயிருக்கிறது. வெளி.1:3.

3. இதை ஆங்கிலத்தில் இவ்வாறாக வாசிக்கிறோம் :
The Revelation of Jesus Christ, which God gave unto him, to show unto his servants things which must shortly come to pass; and he sent and signified it by his angel unto his servant, John. Rev.1:1.
Who bore witness of the word of God, and of the testimony of Jesus Christ, and of all things that he saw. Rev.1:2.
Blessed is he that readeth, and they that hear the words of this prophecy, and keep those things which are written in it, for the time is at hand. Rev.1:3.

4. முதலாவது வசனத்தை நாம் இவ்வாறு வாசிக்கலாம்: இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடு, சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டிய காரியங்களைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், அவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்குச் சின்னங்களால் கொடுத்த காட்சியாகும் என அர்த்தம் கொள்ளலாம். ஆங்கிலத்தில் He sent and signified it எனக் கூறப்பட்டிருக்கிறது. இதை, அவர் அனுப்பி சின்னங்களினால் தெரியப்படுத்தினார் என அர்த்தம் கொள்ளலாம். ஏனென்றால் Signify என்றால் To make known by sign அதாவது சின்னங்களினால் தெரியப்படுத்தல் என பொருள்படும். தீர்க்கத்தரிசியும் Revelation is a book of symbols அதாவது வெளிப்படுத்துதல் சின்னங்களைக் கொண்ட ஒரு புத்தகம் என்கிறார். அது உண்மையென நாம் வெளிப்படுத்தின விசேஷத்தைத் தியானிக்கும் போது அறிவோம்.

5. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் முதல் மூன்று அதிகாரங்கள் சபைக்கு நேரிடுபவைகளை வெளிப்படுத்துகின்றன. பிறகு 4ம் அதி.யிலிருந்து 19ம் அதி.வரைக்கும் சபை காணப்படவே இல்லை. 4ம் அதி.யில் சபைஎடுக்கப்பட்டு, 19ம் அதி.யில் அது திரும்பி வருகின்றது. மணவாளனும், மணவாட்டியும் ஒன்றாக பூமிக்கு வருகின்றனர். அதன் பிறகு 19ம் அதி.யில் இருந்து கடைசி அதி.22 வரைக்கும், ஆயிரம் வருட அரசாட்சியைக் குறித்தும், அதைத் தொடர்ந்து நடப்பவைகளைக் குறித்தும், 4 முதல் 19 அதி.களில் தேவன் இஸ்ரவேலருடன் ஈடுபடுகிறார். (எக்காளப் பண்டிகை, பக்கம் 11, பத்தி 2)

6. பரிசுத்த வேதாகமத்தில் மொத்தம் 66 புத்தகங்கள் உள்ளன. இதில் யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம் கடைசி புத்தகம். இது சரித்திரத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவருகிறது. It brings history to consummation. பழையஏற்பாட்டில் 39 புத்தகங்கள், புதியஏற்பாட்டில் 27 புத்தகங்கள் உள்ளது. பழைய ஏற்பாட்டில் அநேக பகுதிகள் எபிரேய மொழியில் எழுதப்பட்டது. குறைந்த பகுதிகள் அரபி மொழியில் எழுதப்பட்டது. ஆனால் புதியஏற்பாடு முற்றிலும் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது.

7. இயேசுவின் தாய் மொழி அரமேயக் ஆகும். மாற்.14:36ல் நாம் வாசிக்கும் அப்பா பிதாவே (Abba Father) இதில் அப்பா (Abba) அரமேயக் சொல் ஆகும். இவ்வண்ணமாகவே ரோ.8:15ல் உள்ள அப்பா, கலா.4:6ல் உள்ள அப்பா அரமேயக் சொல் ஆகும்.

8. Revelation என்ற ஆங்கிலச்சொல் வெளிப்படுத்தின விசேஷம் எனத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. Revelation என்ற ஆங்கிலச்சொல் Revelatio என்ற லத்தீன் மொழிச் சொல்லிலிருந்து வந்தது. இதன் கிரேக்கச் சொல் Apokalupsis (அப்போகலூப்ஸீஸ்) ஆகும். இதிலிருந்து Apocalypse (அப்போகலீப்ஸ்) என்ற ஆங்கில வார்த்தை வந்தது.

9. வெளிப்படுத்துதல் என்றால் என்ன? What is Revelation? முன்பு மறைந்து/அறியாமலிருந்து இப்பொழுது மறைவு நீக்கப்பட்டு திறக்கப்படுவதாகும்/வெளிப்படுவதாகும். Disclosure of that which was previously hidden or unknown. இதுவரை அறிவிக்கப்படாத ஒன்றை அறிவித்தல் ஆகும். It is something disclosed/revealed. பொதுவாகக் கூறினால் மறைவு நீக்கப்படுதல். உதாரணமாக ஒரு சிற்பி ஒரு சிலையைச் செதுக்கி, அதைத் திரைச்சீலையினால் மூடி, மறைத்துவிட்டு, பின்பு அவனே அந்தத் திரைச்சீலையை நீக்கி, அதின் பின்னால் என்ன உள்ளது என்று திறந்துக் காண்பிப்பது போல் உள்ளது. மறைந்திருக்கிற ஒன்றைத் திறந்து காண்பித்தலாகும்.

10. வெளிப்படுத்தின விஷேசம், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பரமஇரகசியம் (Mystery) வெளிப்படுத்துதல் ஆகும். அதாவது தேவனைப் பற்றிய பரமஇரகசியம் வெளிப்படுத்துதலாகும். பரம இரகசியம் என்றால் என்ன? What is Mystery? Mystery என்பதன் கிரேக்கச் சொல் Mustrion (முஸ்டேரியோன்) என்பதாகும். மறைக்கப்பட்டு, வெளிப்படாத ஒன்று இரகசியம் (Secret). வெளிப்பட்ட பின்பு அது இரகசியமாகாது. ஆனால் வெளிப்பட்டாலும், யாரும் புரிந்து/அறிந்து கொள்ள முடியாத காரியம் பரமஇரகசியம். The revealed one is beyond human understanding. உதாரணமாக ஏழு முத்திரைகள் உடைக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது. யோவான் ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கக் கண்டான். அவன் பார்த்த போது அங்கு ஒரு வெள்ளைக் குதிரை, அதின் மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான். அவனுக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டது. வெளி.6:1,2. இரண்டாம் முத்திரையை உடைக்கக் கண்டான். அப்பொழுது சிவப்பான குதிரை புறப்பட்டது. அதின் மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியில் உள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலை செய்யத்தக்கதாக சமாதானத்தைப் பூமியிலிருந்து எடுத்துப்போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது. வெளி.6:3,4. அவ்வண்ணமாகவே மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம் மற்றும் ஏழாம் முத்திரைகளைக் குறித்து வெளி.6:5,6; 7,8; 9,10,11; 12-17 மற்றும் 8:1 வசனங்களில் வாசிக்கிறோம். இப்பொழுது இதன் பொருளை, அதாவது முத்திரைகள் உடைக்கப்பட்டு யோவான் கண்ட காட்சியை யாரும் அறிந்து/புரிந்துகொள்ள முடியவில்லை. அவைகள் யாவும் சின்னமாகவே உள்ளன. இது தான் பரமஇரகசியம். இதன் பொருளை அறிந்துகொள்ளத்தான் பலர் முட்டி மோதுகின்றனர். எனக்கு வெளிப்படுத்தப்பட்டுவிட்டது, உனக்கு வெளிப்படுத்தப்படவில்லை என பலர் கூறிக்கொள்ளுகிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை/ பொருளைக் கூறுகிறார்கள். அதினால் எங்கும் எதிலும் குழப்பம். ஏனென்றால் இது இரகசியம் அல்ல மாறாக பரமஇரகசியம்.

11. இப்பொழுது பாருங்கள், மறைவானவைகள் தேவனாகிய கர்த்தருக்குரியது. The Secret things belong unto the Lord, our God. வெளிப்படுத்தப்பட்டவைகள் நமக்கு. Those things which are revealed belong unto us. உபா.29:29. நமக்கு என்றால் யாருக்கு? கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடம் இருக்கிறது. சங்.25:14. நீதிமான்களோடு அவருடைய இரகசியம் இருக்கிறது. நீதி.3:32. அன்று ஒரு நாள் கர்த்தர், நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ என்றார். ஆதி.18:18. கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார். ஆமோஸ்.3:7. இப்பொழுது நமக்கு இரகசியங்கள் எதற்காக வெளிப்படுத்தப்பட்டது? நியாயப்பிரமாணம், தேவனுடைய வார்த்தை மற்றும் இக்காலத்துக்குரிய செய்தியின்படியெல்லாம் செய்வதற்கு. That we may do all the words of God and the message of the hour.

12. மறைவானவைகளை வெளிப்படுத்துவது யார்? மறைபொருளை வெளிப்படுத்துகிறவர் தேவன். தானி.2:28. வெளிப்படுத்துதல் தேவஆவியினால் அருளப்படவேண்டும். 2தீமோ.3:16. தேவன் ஒருவர் வாயிலிருந்து வெளியாக்கப்படாத மறைபொருளை வெளிப்படுத்தி நமக்கு உணர்த்துகிறார். கிறிஸ்துவின் ஊழியக்காரன், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரன். 1கொரி.4:1.

13. வெளிப்படுத்தப்பட்டவைகளை அறிந்துகொள்ள தேவனுடையஆவி அவசியம். தேவனுடைய ஆவியினாலேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிந்துக்கொள்ள முடியாது. 1கொரி.2:11. ஒருவன் தேவனுடையஆவியினால் நிரப்பப்படவில்லையென்றால் அவன் வெளிப்படுத்தப்பட்டவைகளை அறிந்து அதன்படி நடக்கமுடியாது. சிலவேளைகளில் சபைகூடும் வேளையில்கூட இரகசியம் வெளிப்படுத்தப்படுகிறது. 1கொரி.14:6-26.

14. தேவனுடைய இரகசியங்கள் ஒரு தனிப்பட்டச்சாராருக்கு மாத்திரமே வெளிப்படுத்தப்படுகிறது. தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது. புறம்பே இருக்கிறவர்களுக்கு இவைகள் உவமைகளாகச் சொல்லப்படுகிறது. மாற்.4:11,12; ரோ.8:29,30. தேவ இரகசியத்தை மனுஷர்கள் தங்கள் சுயஅறிவினாலும், சிந்தனையினாலும் அறிந்துகொள்ளமுடியாது. நாம் நம்முடைய படிப்பு, அறிவு, ஞானம், உத்தியோகம் முதலானவைகளைக் கொண்டும் அறிந்துகொள்ள முடியாது. தேவன் ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்துகிறார். மத்.11:25; ரோ.1:19. வேதவாக்கியங்களை அறிந்துகொள்ள எழுதப்பட்ட மொழியில் பாண்டித்தியம் தேவையில்லை. மாறாக வெளிப்படுத்துதலே அவசியம். வேதவாக்கியங்களைக் கொடுத்த பரிசுத்தஆவியே அதன் பொருளையும் நமக்கு விளக்கித்தர வேண்டும்.

15. நீங்கள் பரிசுத்தஆவியைப் பெற்றிருப்பீர்களானால் இயற்கைக்கு மேம்பட்டக் காரியங்களையும், காணக்கூடாத உலகத்தையும் காணும் ஒரு நபராயிருக்கிறீர்கள். If you have got the Holy Spirit in you, you are a candidate for association with the unseen world and the supernatural things. பரிசுத்தஆவி உங்கள் இருதயத்துக்குள் வரும்போது, நீங்கள் ஒருபுறம் மாம்சத்துக்குரியவர்களாகவும், மற்றொருபுறம் ஆவிக்குரியவர்களாகவும் காணப்படுகிறீர்கள். When the Holy Spirit comes into the heart, one became a two fold being. இது எப்படி? ஒரு சரீரம் இப்பூமிக்குரியது. அது மரிப்பது. One of the earth to die. மற்றொன்று பரலோகத்துக்குரியது. அது ஜீவனுடையது. One of the heaven to live. இந்த சரீரத்தில் அவன் சாவுக்குரியவன். ஆனால் அவனுடைய ஆத்துமாவில் அவன் மரணத்தைக் கடந்து ஜீவனுக்குள் பரவேசிக்கிறான். In his body he is subject to death and in his soul he passed from death unto life.

16. இந்தச் சரீரத்தில், இந்தப் பூமியில் தனது ஐந்து புலன்களோடு தொடர்பு கொள்ளுகிறான். தனது கண்களைக் கொண்டு காண்கிறான். தனது நாவைக் கொண்டு ருசி பார்க்கிறான். தனது தோலினால் உணர்கிறான். தனது மூக்கினால் நுகர்கிறான். தனது காதுகளினால் கேட்கிறான். ஆனால் அவனுடைய ஆவியில், அவன் பரிசுத்தஆவியினால் தேவனோடு தொடர்புடையவனாகிறான். அவனுடைய ஆவிக்குரிய ஐந்து புலன்களாவது கற்பனை, மனச்சாட்சி, ஞாபகம், யோசனை, பாசம் ஆகும்.

**சரீரத்துக்குரிய ஐந்து புலன்கள் :**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. கண் | - | Eye | - | பார்த்தல் | - | See |
| 2. நாவு | - | Tongue | - | ருசிபார்த்தல் | - | Taste |
| 3. தோல் | - | Skin | - | உணருதல் | - | Feel |
| 4. மூக்கு | - | Nose | - | முகர்தல் | - | Smell |
| 5. காது | - | Ear | - | கேட்டல் | - | Hear |

**ஆவிக்குரிய ஐந்து புலன்கள் :**

| | | |
|---|---|---|
| 1. கற்பனை | - | Imagination |
| 2. மனச்சாட்சி | - | Conscience |
| 3. ஞாபகம் | - | Memory |
| 4. யோசனை | - | Reason |
| 5. பாசம் | - | Affection |

17. இப்பொழுது வெளிப்படாத மறைபொருள் இல்லை. மேலும் அறியப்படாத இரகசியமும் இல்லை. மத்.10:26; லூக்.12:2. ஆம், ஏழாம் தூதனுடைய, ஏழாம் சபைக்காலத் தூதனுடைய அதாவது லவோதிக்கேயா சபைக்காலத் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவஇரகசியம் நிறைவேறும்.வெளி.10:6. ஆம், அவனுடைய ஊழியத்தில் தேவ இரகசியம் முற்றுப்பெறும்.

18. ஆனால் வெளிப்படுத்துதலில் எது உண்மை, எது பொய் எனக் கண்டுப்பிடிப்பது சிரமம். ஏனென்றால் நம் மத்தியில் கள்ளத்தீர்க்கத்தரிசிகள் உண்டு. மத்.7:15, 24:11. மதிகெட்டத்தீர்க்கத்தரிசி உண்டு. எசே.13:3. கர்த்தர் அனுப்பாத தீர்க்கத்தரிசி உண்டு. உதா.அனனியா. எரே.28:15. தங்கள் நாவின் சொல்லை தீர்க்கத்தரிசனமாக உரைக்கிற தீர்க்கத்தரிசி உண்டு. எரே.23:31. கர்த்தருடைய நாமத்தினால் பொய்யாய்த் தீர்க்கத்தரிசனம் உரைக்கிற தீர்க்கத்தரிசி உண்டு. உதா.சிதேக்கியா. எரே.14:13,14; 29:21-23. பொய் போதகம் பண்ணுகிறத் தீர்க்கத்தரிசி உண்டு. ஏசா.9:15. மேலும் சில சமயங்களில் கர்த்தரே பொய்யின்ஆவியை அனுப்புகிறார். 1இரா.22:22. அதோடு மட்டுமல்ல ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள், மாரடிக்கிறார்கள், தீர்க்கத்தரிசிகள் பணத்திற்குக் குறிசொல்லுகிறார்கள், ஆனாலும் கர்த்தர் எங்கள் நடுவில் இல்லையோ என்கிறார்கள். மீகா.3:11. இக்காலத்துக்குரியச் செய்தியை சார்ந்துள்ளோம் என்கிறார்கள். ஆனால் இக்காலத்துக்குரியச் செய்திக்குக் கீழ்படிவதில்லை. ஆனாலும் நாங்களும் செய்தியில் இல்லையோ! நாங்களும் எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்குபெறுவதில்லையோ என்கிறார்கள். அவரை (இயேசு கிறிஸ்து) அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான். அவனுக்குள் சத்தியமில்லை. 1யோ.2:4. அவ்வண்ணமாகவே இக்காலத்துக்குரிய செய்தியை அறிந்திருக்கிறேன் எனக் கூறி, ஒருவன் அவைகளுக்குக் கீழ்படியாமற்போனால் அவன் செய்தியை அறியவேண்டிய பிரகாரமாக அறியவில்லை. அவனுக்குள் சத்தியமில்லை.

**19. நீங்கள் தவறாயிருப்பதைப் பார்த்துவிட்டு உங்கள் முதுகில் நான் தட்டிக்கொடுக்கமாட்டேன். இதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நான் உங்களை அதிகமாக நேசிப்பதினால் அப்படி என்னால் செய்ய முடியாது. ஆனால் சிலர் அப்படி செய்யக்கூடும். அது வேறு விதமான அன்பு. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூறுகிறாரோ அவனை சிட்சித்து, தண்டிக்கிறார். எபி.12:6.**

20. பாருங்கள், தங்களைப் பெரிய ஊழியக்காரன் என்கிறார்கள். நாய் தான் கக்கினதைத் திரும்பத் தின்னும் என்னும் பழமொழிக்கு ஏற்றாற்போல் தாங்கள் விட்டுவந்த ஸ்தாபனசபைகளில் சம்பந்தம் கொள்ளுகிறார்கள். அதாவது தங்களது பிள்ளைகளுக்கு ஸ்தாபனசபைகளில் பெண் கொள்ளுகிறார்கள், கொடுக்கிறார்கள். அடுத்து ஒரு அவிசுவாசியைத் திருமணத்திற்காக விசுவாசியாக மாற்றுகிறார்கள். இப்படிப்பட்ட மாய்மாலம் உடையவர்களும் இதோ நாங்களும் பறந்துவிடுவோம் எனக் கூறுகிறார்கள்.

21. கண்காணிப்பை விரும்புகிறவன், அதாவது பாஸ்டர், டீக்கன், மூப்பர் போன்ற உத்தியோகங்களில் உள்ளவர்கள் தங்கள் சொந்த குடும்பதை நன்றாய் நடத்துகிறவர்களும், தங்கள் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்படியப்பண்ணுகிறவர்களாய் இருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பதை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? என வேதம்

கூறுகிறது. 1தீமோ.3:4,5. தேவனுடைய சபைபொறுப்பு உடையவன் ஒரு குடும்பஸ்தனாக இருக்கவேண்டும். இப்படியிருக்க இந்நாட்களில் திருமணம் ஆகாத வாலிபர்கள் தங்களை பாஸ்டர் என அழைத்துக்கொள்கிறார்கள். இன்னும் மீசையே முளைக்காதவன் தன்னை மூப்பன் என அழைத்துக் கொள்ளுகிறான். இவர்கள் தான் தேவனுடையச் சபையை விசாரிக்கிறார்கள், அதோடுமட்டுமல்ல மற்றவர்களுக்குச் சபையில் திருமணமும் செய்து வைத்து ஆசிர்வாதம் செய்கிறார்கள். இது ஒரு பெரிய வெட்கக்கேடு. இவர்களையும் நம்பி ஒரு கூட்டம் ஜனங்கள். இந்த நூதன சீஷர்கள், நாங்கள் தான் உண்மையான சபை, நாங்கள் தான் நூற்றுக்கு நூறு செய்தியில் இருக்கிறோம், கர்த்தருடைய வருகை இப்பொழுது வந்தால் கூட ஒரு இமைப்பொழுதில் பறந்திடுவோம் என்கிறார்கள். இதென்ன? எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது. இப்படிப்பட்ட சபைகளின் முடிவு என்ன? அவன் மரித்துப்போவான், அவனை நம்பின யாவரும் சிதறி, அவமாய் போவார்கள்.

22. பாருங்கள், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மாத்திரமே வஞ்சிக்கப்பட முடியாது. மத்.24:24. ஒரு உண்மையான தீர்க்கத்தரிசியின் அடையாளத்தைக் காணவேண்டுமா? ஆமோஸ்.7:14-17யை வாசியுங்கள். மேலும் எரே.28:15-17யும் தியானியுங்கள். தேவனுடைய உண்மையான தீர்க்கத்தரிசி தேவனைப் போல் அதிகாரமுடையவன். ஏனென்றால் தேவனுடைய வார்த்தை தீர்க்கத்தரிசிக்கே வருகிறது. They do not regard themselves as prophet but acts as God. இங்கு சகோ.வி.ம.பிரன்காம் கூட்டத்தில் நடந்த ஒரு சம்பவத்தை எழுத விரும்புகிறேன். இது ஒண்டாரியோவிலுள்ள வின்ட்ஸர் என்னும் இடத்தில் நடந்தது. கிறிஸ்து சபையைச் சார்ந்த ஒரு பிரசங்கி, சகோதரனுடைய ஊழியம் மனோவசியசக்தியினால் செய்யப்படுகிறா என்பதை சோதிக்க வியாதி இல்லாதவனாக இருந்தும், வியாதி உள்ளவன் மாதிரி நடித்தான். தீர்க்கத்தரிசி அவனிடம் ஐயா, உங்களுக்கு எந்த வியாதியும் இல்லை எனக் கூறுகிறார். அவன் ஓ! எனக்கு இரண்டு வியாதிகள் உண்டு எனக் கூறுகிறான். அவர் உன்னிடம் வியாதிக்குரிய அடையாளங்கள் எதுவும் காணப்படவில்லை, ஆகவே நீ ஒரு சுகதேகியான மனுஷன் என்கிறார். அவன் சபையோரிடம் இங்கு நடக்கும் தந்திரத்தைப் பாருங்கள். என் வியாதிகள் என்னவென்று நான் ஜெப அட்டையில் எழுதியுள்ளேன். அதிலுள்ளவைகளைக் கூட இவனால் கூற முடியவில்லை. இவரது ஊழியம் ஒரு ஏமாற்றுவித்தை எனக் கூறினான். அப்பொழுது அங்கே தேவனுடைய கிருபையானது தாழ இறங்கி வந்தது. தீர்க்கத்தரிசி அந்த மனிதன் அவரை சோதிக்க எவ்வாறு திட்டம் தீட்டி வந்தான் என்பதை விவரிக்க, முடிவில் அவன் அதை ஏற்றுக்கொள்கிறான். அப்பொழுது தீர்க்கத்தரிசி அவனிடம் ஐயா, இந்த ஜெப அட்டையில் உங்களுக்குக் காசநோய், புற்றுநோய் என்று எழுதியிருக்கிறீர்கள். அந்த இரண்டு வியாதிகளையும் இந்தக்கணமே நீர் பெற்றுக்கொள்ளுகிறீர், அது உமக்குச் சொந்தமானது என்று கூற, அந்த இரு வியாதிகளும் அவனைப் பிடித்துக்கொண்டன. அதுவே அவனுடைய முடிவாயிற்று. இது குறித்து நீங்கள் **மூவகை விசுவாசிகள்** என்ற செய்தியில் வாசிக்கலாம். பாருங்கள், தீர்க்கத்தரிசிகள் தேவனைப்போல் நடப்பார்கள். The Prophet William Marrion Branham acted as God.

23. ஒருவன் தன்னை பாஸ்டர் என அழைத்துக்கொள்ளுகிறான். வீடுவீடாக, தெருத்தெருவாக, ஊர் ஊராக சுற்றித்திரிகிறான். ஏதோ இவன் தான் தேவனுடைய குணமாக்கும் வரத்துக்கு உக்கிராணக்காரன் என்பது மாதிரி வாருங்கள், நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன், நிங்கள் அந்தஇந்த வியாதிகளில் இருந்து, கடன் பிரச்சனையிலிருந்து, பில்லிசூனியத்திலிருந்து விடுதலை பெறுவீர்கள் எனக்கூறி, மக்களை இம்மைக்குரிய நன்மைகளுக்காக மாத்திரம் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தி அவர்களிடம் காணிக்கை, தசமபாகம் பெற்று தன் ஜீவனத்தை அமைத்துக்கொண்டு; வாருங்கள் உங்களை இக்காலத்துக்குரியச் செய்தியில் வழிநடத்துகிறேன் எனக்கூறி அவர்களை அடிமையாக்கி, ஆட்கொண்டு, ஆளுகை செய்து, தன் குட்டி சாம்ராஜ்யத்தை அங்கு நிறுவுகிறான். இவன் ஸ்தாபனத்தைவிட கேடுகெட்டவன். ஸ்தாபனம் மக்களை அடிமையாக்குகிறது. ஆனால் இங்கு ஒரு தனிப்பட்ட மனிதன் ஒரு கூட்டம் ஜனங்களை தன் அடிமையாக்குகிறான். இவனுடைய ஊழியம் கலிலேயனாகிய யூதாசை போன்றும், தேயுதாஸை போன்றும் உள்ளது. அப்.5:36,37. இப்படிப்பட்ட ஊழியக்காரர்களுக்கு நம் மத்தியில் குறைவு இல்லை. பாருங்கள், இவர்கள் தங்கள் ஊழியத்தின் ஆரம்பக் கட்டத்தில் உங்களை நாடி வைராக்கியம் பாராட்டுகிறார்கள். ஆனால் அவர்கள் நல்மனதோடே அப்படிச் செய்கிறதில்லை. உங்களைக் கொண்டு அவரது ஊழியம் ஸ்திரப்பட்டவுடன் நீங்கள் அவர்களைநாடி வைராக்கியம் பாராட்டும்படி உங்களை அடிமைகளாக்கு கிறார்கள். தகப்பனுக்கும் மகனுக்கும், தாய்க்கும் மகளுக்கும், புருஷனுக்கும் மனைவிக்கும் மத்தியில் பிரிவினையை உண்டாக்கித் தனக்கு எல்லாவற்றிலும் கீழ்படியாவிட்டால் சபையை விட்டு வெளியேறலாம் எனக்கூறி மக்களை அடிமைப்படுத்தும் பாஸ்டர்கள் நம் மத்தியில் நிறைய உண்டு. இவர்கள் யாவரும் கள்ள, கபடமுள்ள வேலையாட்கள். ஆதலால் இப்படி உங்களை அடிமைப்படுத்தும் பாஸ்டரை விட்டு வெளியேறுவது உங்கள் ஆத்துமாவுக்கு நலமேயன்றி நஷ்டமில்லை. முதலாவது சபைக்கு வாருங்கள், வாருங்கள் என அழைத்தவர்கள் பின், ஓ! என் பேச்சைக் கேட்டாவிட்டால் சபையை விட்டு வெளியேறு என்கிறார்கள். இங்கு கலா.4:17யை தியானியுங்கள். இதற்கு கடைசிகால செய்தி ஊழியர்கள் என்பவர்கள் ஒன்றும் விதிவிலக்கு அல்ல.

24. நன்கு கவனியுங்கள்: நாம் அனைவரும் அதாவது கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்கள் அனைவரும் எபே.1:1, தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவின் வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும் பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு சுவிசேஷத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காகவும் அவர் (கிறிஸ்து) சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கத்தரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகர்களாகவும், சிலரை மேய்ப்பர்களாகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். ஆனால் இந்நாட்களில் தங்கள் கைகளில் கொஞ்சம் பணவசதியுள்ள புள்ளிகள் தங்கள் சபையில் தங்களுக்கு விருப்பமானவர்களைப் பாஸ்டராகவும், சுவிசேஷகர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்துகிறார்கள். பணம் எல்லாவற்றிற்கும் உதவுகிறது.

25. இப்பொழுது கவனியுங்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை மேற்கூறிய ஐந்துவகை ஊழியங்கள் அல்லாது பூரணப்படுவது இல்லை. இல்லவேயில்லை. சிலர் பாஸ்டர் ஊழியம் மட்டுமே போதும்

என்கிறார்கள். இவன் ஒரு யூதாஸ். இது பண ஆசை கொண்ட, உங்கள் காணிக்கை, தசமபாகம் மற்ற ஊழியங்களுக்குச் சென்றுவிடக்கூடாது என நினைக்கும் சுயநலவாதிகளின் தந்திரமானச் செயலாகும். ஐந்துவகை ஊழியத்தின் பலன்கள் சபை பூரணப்பட தேவை. மற்றபடி சபை பக்திவிருத்தி அடையாது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை ஒரு பாஸ்டரைக்கொண்டோ அல்லது ஒரு போதகனைக்கொண்டோ, ஒரு சுவிசேஷகனைக்கொண்டோ பக்திவிருத்தி அடையாது. மாறாக ஐந்து வகை ஊழியங்களைக் கொண்டே பக்திவிருத்தி அடையும். **நன்கு கவனியுங்கள், ஒரு பாஸ்டரைக் கொண்டு தேவன் தமது சபையை உருவாக்கியதாக வேதத்தில் எங்கும் ஆதாரம் இல்லை. ஒரு பாஸ்டரைக் கொண்டே தேவன் தமது சபையை உருவாக்குகிறார், பக்திவிருத்தி அடையச்செய்கிறார், பூரணப்படச் செய்கிறார் என்று நீங்கள் வேத வாக்கியங்களைக் கொண்டு நிருபிப்பீர்களானால் நான் எனது ஊழியத்தை விட்டு விலகத்தயாராக இருக்கிறேன். இதை சென்னை, வலசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல் அவர்களுக்கும், சென்னை, புரசவாக்கம் பாஸ்டர் அரவிந்கோஸ் அவர்களுக்கும் சவாலாக எழுதுகிறேன். வேதத்தின் அடிப்படையில் அப்போஸ்தலர்கள், சுவிசேஷகர்களைக் கொண்டே கர்த்தர் தம்முடைய சபையை உருவாக்கினார், உருவாக்குகிறார், உருவாக்குவார். இது குறித்து அப்.2அதி மற்றும் ரோ.10அதி தியானியுங்கள்.** ஒருவன் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்தியவசனத்தைக் கேட்டு, விசுவாசமுள்ளவனாக வேண்டும். ஒருவன் பாஸ்டர் ஜெபம் பண்ணினார், வயிற்றுவலி சுகமாகிவிட்டது; ஆதலால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன், ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறேன். நாளை முதல் சபை கூடுதலுக்கு வருகிறேன் எனக் கூறி, சபை கூடுதலுக்கு வருவானாகில், அவன் அந்த பாஸ்டர் சபையில் தான் அவயவமாக இருக்கமுடியும். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவமாக இருக்கமுடியாது. பாஸ்டர் சாமுவேலும், பாஸ்டர் அரவிந்கோஸ்ம் இப்படித்தான் மக்களை இம்மைக்குரிய நன்மைகளுக்காகக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிறார்கள். இவர்கள் ஆத்தும இரட்சிப்புக்காக மக்களைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தத் தவறிவிட்டனர். இவர்கள் சென்றுகொண்டு வருகிற தவறான வழியில் இருந்து திரும்பி, உண்மையான பாதைக்கு திரும்பும்படி தங்களுக்குரிய எச்சரிப்பை பெறுகிறதான வேளையாக இது இருக்கிறது. ஓ! அவர் ஒரு பெரிய சபைக்குப் பாஸ்டர். அதுகுறித்து எனக்குக் கவலையில்லை. தேவனுடைய நியமத்துக்கு மாறானது எதுவோ அது தேவனுடையதாக இருக்க முடியாது. ஒருக்காலும் முடியாது.

26. உதாரணமாக தாவீது மற்றும் உடன்படிக்கைப்பெட்டி. 1நாளா.13வது மற்றும் 15வது அதிகாரங்கள். தாவீதும் இஸ்ரவேலர் அனைவரும் யூதாவில் இருக்கிற கீரியாத்யாரிமுக்கடுத்த பாலாவிலிருந்து தேவனுடைய பெட்டியைக் கொண்டுவரச் சென்றார்கள். உடன்படிக்கைப் பெட்டியை ஒரு புது ரதத்தின் மேல் ஏற்றிக்கொண்டு வந்தார்கள். முடிவில் கீத்தியனாகிய ஓபேத் ஏதோமின் வீட்டிலேயே விட்டுவிட்டு வந்தார்கள். உடன்படிக்கைப்பெட்டியைக் கொண்டுவர முடியவில்லை. ஏனென்றால் அது தேவ நியமத்துக்கு மாறானது. பின்பு தேவநியமத்துக்கு உட்பட்டு, லேவியர் ஒழிய வேறொருவரும் தேவனுடைய பெட்டியை எடுக்கலாகாது, தேவனுடைய பெட்டியை எடுக்கவும் என்றென்றைக்கும் அவருக்குப் பணிவிடைச் செய்யவும் அவர்களை கர்த்தர் தெரிந்துகொண்டதினால் பின் லேவியரைக் கொண்டு கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை கொண்டு வந்தான். பாருங்கள் எல்லாவற்றிற்கும் தேவ நியமம் ஒன்று உண்டு. தேவன் ஒருகாலும் பாஸ்டரைக் கொண்டு தமது சபையை உருவாக்கவில்லை. அப்படியானால் பாஸ்டர் சாமுவேலைக்கொண்டும், பாஸ்டர் அரவிந்கோஸை கொண்டும் உருவாக்கப்பட்ட சபை எப்படி தேவனுடைய சரீரமாகிய சபை ஆகமுடியும்? ஆனாலும் அங்கு தேவனுடைய வித்துக்கள் உண்டு. அவைகள் ஏற்ற வேளையில் தாய் கழுகுவிடம் பறந்து சென்றுவிடும். கோதுமை மணிகளே உங்களை பதரிலிருந்து பிரித்துக்கொள்ளுங்கள். அது இவ்வேளையாக இருக்கிறது என்று உங்களுக்கு அறிவுரைக் கூறுகிறேன்.

27. கடலூர் சகோ.மாற்கு என்பவர் சென்னை, பட்டாபிராம் பாஸ்டர் எட்வர்ட் வாயின் வார்த்தை தேவனிடத்திலிருந்து வருகிறது என்கிறார். பாஸ்டர் எட்வர்ட் தன் பிரசங்கங்கள் தேவனுடைய சத்தம் என்கிறார். நானோ இவர்களைக் குறித்து அப்.12:22,23யை நினைவு கூர்ந்தேன். அதோடு மட்டுமல்ல அப்பம், திராட்சைரசம் அதாவது கர்த்தருடைய இராப்போஜனம் ஒரு பாரம்பரியம், ஜனங்கள் பாரம்பரியத்துக்குப் போய்விட்டார்கள், பாரம்பரியத்தை நீக்கு என்கிறார். இன்னும் செய்திக்குக் கீழ்படியாவிட்டால் அவனுக்கு நித்தியஜீவன் இல்லை என்கிறார். இவ்வாறாக மற்றவர்களாலும் தன்னாலும் புகழ்ந்துகொள்ளப்பட்டும், சாதூர்யமான உபதேசங்களைக் கொண்டு வரும் பெரிய ஊழியக்காரர் பாஸ்டர் எட்வர்ட் அவர்கள் பிரசங்கத்தை எட்டு கேசட்டுகளில் பதிவு செய்து என்னிடம் கொடுத்து நீங்கள் கேட்டு மகிழுங்கள் என நம்முடைய சகோதரர்களில் ஒருவர் கொடுத்தார். பலமாதங்களாகக் கேட்க நேரம் இல்லை. ஆனாலும் ஒருநாள் சமயம் எடுத்து அதைக் கேட்க ஆரம்பித்தேன். பாஸ்டர் எட்வர்ட் முயற்சியால் மதுரை, பாஸ்டர் ரவிசந்திரன் கட்டிய சபை கட்டிடப் பிரதிஷ்டை விழாவாக அந்த செய்தி சமயம் இருந்தது. இன்றைக்குப் பாஸ்டர் எட்வர்டை சிலர் காக்காப் பிடிக்கக் காரணம் என்ன? அவரை வைத்து வெளிநாட்டுப் பணத்தினால் ஒரு சபைக்கட்டிடம் கட்டி, அதை தன் சொத்தாக்கிக்கொள்ளலாம் என்ற நம்பாசையினால் தான். அந்த கேசட்டில் தான் மேற்கூறிய புகழாரம் அனைத்தும் இருந்தது. அதைக் கேட்க ஆரம்பித்தேன். சிறிது நேரத்திலே எனது மனைவி மற்றும் பத்து வயது குழந்தை இது என்ன அரசியல் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள் என விமர்சனம் செய்தனர். நானோ ஐயோ! அப்படிச் சொல்லாதீர்கள் தமிழ்நாட்டில், இக்காலத்துக்குரிய செய்தியில் ஒரு பெரிய ஊழியக்காரார், மற்றும் வெளிநாடுகளில் இருந்து வரும் ஊழியர்கள் இவர் ஒத்தாசை இல்லாமல் தமிழ்நாட்டிற்குள் நுழையமுடியாது, அந்த அளவுக்கு பெயரும் புகழும் படைத்தவர் செய்திகளை இப்படிக் கூறுகிறீர்களே எனக் கூறி, இவர் என்ன தான் பிரசங்கிக்கிறார் என்பதைக் கேட்க விரும்பினேன். முடிவில் ஒரு கேசட்டைக்கூட முழுமையாகக் கேட்க முடியவில்லை. காரணம் என்னவென்றால் சினிமா நடிகர் எம்.ஜி.ஆர். காலங்களில், அவரது திரைப்படங்கள் திரையிடும் போது, அவர் தி.மு.க.வில் இருந்த நாட்களில் பெரும்பாலானப் படங்களில் தி.மு.க.கொடி பறக்கும். அப்பொழுது தியேட்டரில் உள்ள ரசிகர்கள் விசில் அடிப்பார்கள், கைத்தட்டுவார்கள், ஆரவாரம் செய்வார்கள். மேலும் அவர் அந்த படத்தில் முதன்முதலாகத் தோன்றும் சமயமும் இப்படிப்பட்ட ஆரவாரம் உண்டாகும். இன்னும் அரசியல் மேடையிலும் தங்கள் தலைவர் பேச்சுக்கு அவரது தொண்டர்கள் கைதட்டி ஆரவாரம் செய்வார்கள். **இப்படித்தான் இந்தக் கேசட் நிகழ்ச்சிகள் இருந்தது. ஒரு ஆவிக்குரிய மனிதன் பிரசங்கமாக இல்லை.**

என்னப் பேசுகிறார், எதைப் பேசுகிறார் என்று அறியமுடியாத அளவுக்குத் தலைவரின் உரத்த சத்தமும், ரசிகர்களின் கூச்சலும், ஆரவாரமும் தான் அந்த கேசட்டில் நான் கேட்டது. இவரது செய்தி கேசட்டையும் சகோ.பிரன்காம் செய்தி கேசட்டையும் போட்டு கேளுங்கள். அப்பொழுது எங்குத் தேவனுடையஆவி கிரியை செய்கிறது என்பது தெரியும். இப்பொழுது அந்த எட்டு கேசட்டுகளும் ஒரு மூலையில் தேடுவாறற்றுக் கிடக்கிறது.

28. இந்தப் பெருந்தலைவர் அந்த சந்தடி ஆரவாரத்தில் கூறுகிறதாவது: அது Right or Wrong உன் பாஸ்டருக்குச் செவிக் கொடு. பாருங்கள், அது சரியோ அல்லது தவறோ நீ உன் பாஸ்டருக்குச் செவிக் கொடு. இது அவரது சுயஉபதேசமா? அல்லது செய்தியா? அல்லது தேவனுடைய சத்தமா? சத்தியமும் தவறும் ஒன்றோடொன்று கலவாது. ஐயா! அது ஒருபோதும் கலவாது. Truth and Error cannot mix. அது சத்தியம் அந்நாட்களில் ஊழியக்காரர்களை பதம்பார்த்து அவர்கள் பொய்யர்கள் எனக் கண்டார்கள். வெளி.2:2. அவ்வண்ணமாகவே பிரியமானவர்களே நீங்களும் இக்காலத்து ஊழியர்களைப் பதம்பார்த்து அவர்கள் பொய்யர்கள் எனக்கண்டால் அவர்களை விட்டுவிலகுங்கள். ஏனென்றால் இக்காலத்துக்குரிய செய்தியில் நிறைய கள்ள, கபடமுள்ள வேலையாட்கள் உண்டு. சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. இது ஒரு கொடிய வஞ்சிப்புக் காலம். இந்தக் கூட்டம் கலிலேயனாகிய யூதாசினுடைய கூட்டம் என நான் எனக்குள் முடிவு எடுத்தேன்.

29. தேவனுடைய வார்த்தை ஆம் அல்ல என்று இருக்கவில்லை. தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் ஆம் அல்ல என்றிராமல், ஆம் என்றே இருக்கிறார். 2கொரி.1:18. பிரியமானவர்களே, ஊழியக்காரனிடத்தில் உபதேசத்தில் தவறு என்பதற்கு இடமேயில்லை. அது சரி என்றே இருக்க வேண்டும். பாருங்கள், God's word is right. தேவனுடைய வார்த்தை சரியானது. And anything that's contrary to the word of God is wrong. தேவனுடைய வார்த்தைக்கு மாறானது எதுவுமே தவறு. தேவன் தவறாக இருக்க முடியாது. ஒரு பாஸ்டர் இரண்டிலும் நிலைநிற்க முடியாது. அவர் ஏதாவது ஒன்றில் நிலைநிற்க வேண்டும். பிரியமானவர்களே, இப்படிப்பட்ட உபதேசம் பேய்த்தனத்துக்கடுத்தது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

30. இந்தக் கூட்டம் இந்த அளவுக்கு வளருகிறதற்குக் காரணம் வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு அடிக்கடி வந்து செல்லும் சகோ.அந்தோனி ஆப்மா, (W.B.G.N.S. Managing Director) மற்றும் சுவிசேஷகர் என்று அழைக்கப்படும் சகோ.கிளாஸ் டி ஜங்க் ஆகும். இவர்கள் இருவரும் இவரைக்கொண்டு தமிழ்நாட்டில் தங்கள் காரியங்களைச் சமாளித்து வருகிறார்கள். இவர்கள் இருவரிடமும் அப்படி என்ன விசேஷம்? ஆவிக்குரியக் காரியங்களில் ஒன்றுமில்லை. ஆனாலும் நாய்களுக்குப் போட எலும்புத்துண்டுகள் மாத்திரமே உண்டு. பிரியமானவர்களே இந்த கூட்டம் ஒரு ஆவிக்குரிய மக்களின் கூட்டம் அல்ல. ஏதோ அவர்கள் கையில் வெளிநாட்டு பணச்செல்வாக்கு இருக்கிறது. அதைக்கொண்டு ஆடுகிறார்கள், பாடுகிறார்கள், ஓடுகிறார்கள். அவ்வளவுதான். பிரன்காம் செய்தியைப் பேசாவிட்டால் பைபிளை கீழே வைத்துவிடு என்று உபதேசிக்கிறார்கள் என்றால் இவர்கள் பேச்சில் எவ்வளவு நயவஞ்சகம் இருக்கிறது என்பதை ஆவிக்குரியவர்கள் தான் நிதானிக்க முடியும். மேற்கூறிய இரு வெளிநாட்டு சகோதரர்கள் போடுகிற எலும்புத்துண்டுகளே இவர்களைக் குதிக்க வைக்கிறதேயன்றி தேவனுடையஆவி இவர்களைக் குதிக்க வைக்கவில்லை.

31. உங்களை எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறது என நீங்கள் விசுவாசிக்கும் இக்காலத்துக்குரியச் செய்தி ஒரு ஊழியக்காரருடைய கடமை குறித்து என்னக்கூறுகிறது?

அ) தேவன் நிமித்தம் நீங்கள் பொல்லாங்கானவைகளுக்கு விரோதமாய் கூக்குரலிடுங்கள். பாவத்துக்கு விரோதமாய் கூக்குரலிடுங்கள். தவறுக்கு விரோதமாய் கூக்குரலிடுங்கள். (கர்த்தருடைய சமூகத்தில் இருந்து விலகி ஓடிப்போகும் ஒரு மனிதன். பத்தி122) Because of God you cry out against evil, cry out against sin, cry against the things that's wrong.

ஆ) She said, "It is not polite for a Minister in the pulpit to speak against smoking. You have nothing to do with that. I said, IT IS MY DUTY TO SPEAK AGAINST ANYTHING THAT IS WRONG. God help the preacher that has not got a discernment of the right enough, anything that is wrong (Discerning the body of the Lord. page 8, para 4)

இ) I am known to be a critic, but I'd – I – I am not critical, only anything that's wrong. See, But I ….. we should critise wrong (The way of a true prophet. Page 11, para 2)

பாருங்கள், தீர்க்கத்தரிசி இங்கு என்ன கூறுகிறார்? தவறு ஒன்று இருக்குமானால் அதற்கு விரோதமாக கூக்குரலிட வேண்டியது தனது மீது விழுந்த கடமை என்கிறார். அது அவர் மீது மட்டும் விழுந்த கடமை அல்ல, உண்மையும் உத்தமுமான ஒவ்வொரு ஊழியக்காரனுடைய கடமையுமாகும். கள்ள, கபடமுள்ள வேலையாட்கள் தவறு குறித்து எதுவும் கண்டுக் கொள்ளமாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் தான் அதைச் செய்கிறவர்கள்.

**32. அங்கு ஒரு ஊழியக்காரனின் மனைவி... காதுகளில் டோலாக்குகளை (Ear Rings) மாட்டியும், இன்னும் பலவிதமான அலங்காரங்களை செய்தவளாகவும் காணப்பட்டாள். அவ்விதக் காரியங்களைக் கொண்டிருந்தாலும் தாங்கள் பரிசுத்தஆவியைப் பெற்றவர்கள் என்று அவர்கள் கூறிக்கொள்ளுகிறார்கள். ஆனால் தேவனோ அவர்களைக் கடிந்துக் கொள்கிறார். அந்தக் காரியத்தை நான் அன்று மிகவும் எதிர்த்து பிரசங்கம் செய்தேன். அதன் பின்பு அங்கு நான் திரும்பவும் அழைக்கப்படவில்லை. அதை நான் எதிர்பார்க்கவும் இல்லை. (ஒரு உண்மையான தீர்க்கத்தரிசியின் பாதை. பக்கம் 25, பத்தி 2)**

33. இப்படிப்பட்ட மனப்பக்குவத்தைத்தான் நான் நமது சபைகளிலும் காண்கிறேன். உதாரணமாக:

அ) சென்னை, பல்லாவரம் சகோ.தங்கமணி சபையில் கர்த்தருக்குரிய தசமபாகம், கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைய ஏற்படுத்தியுள்ள ஐந்துவகை ஊழியங்களுக்கும் உரியதாகும் என பிரசங்கம் பண்ணினேன். அதினால் நான் மறுமுறை அழைக்கப்படவில்லை.

ஆ) சென்னை, புரசவாக்கம் சகோ.அரவிந்கோஸ் சபையில் என் செய்தியைக்கேட்ட, செய்தித் தொகுப்பைத் தியானித்த விசுவாசிகள் தங்கள் கழுத்தில் தாலியை அணிய ஆரம்பித்தார்கள். இக்காலத்துக்குரியச் செய்தி அதை ஆமோதிக்கிறது. செய்தியை விசுவாசிக்கிறேன், பிரசங்கிக்கிறேன் என்று கூறும் இவர் முற்றிலுமாகச் செய்திக்கு மாறாகவே நடப்பதைக் கண்டேன். சபையில் ஒழுங்குமுறை எதுவும் கிடையாது. சிலர் தலைமுக்காடு அணிவது உண்டு, சிலர் அணிவது கிடையாது. ஞாயிறு காலை ஆராதனை ஏழு மணியிலிருந்து ஒன்பது மணி வரை. ஆனால் பணவசதியுள்ளவர்கள் 8 லிருந்து 8½ மணிக்கெல்லாம் சபைக்கு வருகிறதைக் கண்டு, மிகவும் கண்டிக்க ஆரம்பித்தேன். இதில் பாஸ்டருக்கு மிக்க வருத்தம். அநேகர் கர்த்தருடைய இராப்போஜனப்பந்திக்கு வருவதில்லை. அதன் முக்கியத்துவத்தைப் பிரசங்கிக்க, அநேகர் வந்து கலந்துகொள்ள ஆரம்பித்தனர். இராப்போஜனத்தில் பெண்கள் வெள்ளைஆடை அணிந்துவரும் பெந்தெகொஸ்தே ஸ்தாபன நாகரீகம் இருந்தது. அந்தப் பாரம்பரியத்தைக் கண்டித்தேன். சபையில் வருடம் 365 நாட்களும் அந்நியஆவியினால் பேசும் அந்நிய பாஷையை பாஸ்டர் தனது வழக்கமாகக் கொண்டிருந்தார். சபை முற்றிலுமாக ஸ்தாபன பெந்தெகொஸ்தே பாரம்பரியத்திலே நடத்தப்பட்டுவருவதைக் கண்டு சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் அவற்றை கண்டித்து வந்தேன். முடிவில் என்னுடைய உபதேசத்தைக் கேட்டு கழுகுக்குஞ்சுகள் பறக்க ஆரம்பித்தது. ஆதலால் என்னால் சபை உடைய ஆரம்பிக்கிறது என்றக் குற்றச்சாட்டை பாஸ்டர் என்மீது கொண்டு வந்தார்.

இ) சென்னை, வலசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல் சபையில் நான் அனுமதிக்கப்படுவதில்லை. நான் பெண்கள் தாலி அணியவேண்டும், அவர்கள் சுடிதார் அணிவதில் தவறு இல்லை, ஐந்துவகை ஊழியம் உண்டு, தசமபாகம் இந்த ஐந்துவகை ஊழியங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று நான் உபதேசித்து வருகிறதே இதற்குக் காரணம். ஆனால் பாஸ்டரோ ஐந்துவகை ஊழியம் கிடையாது என்பவர். மேலும் பாஸ்டர் ஊழியம் மட்டுமே உண்டு என சாதிப்பவர். பெண்கள் அணியும் சுடிதார் ஆடை ஆண்களுடைய ஆடையா? வேதம் ஆண்கள் ஆடையைப் பெண்களும், பெண்கள் ஆடையை ஆண்களும் அணியக்கூடாது என்கிறது. உபா.22:5. நமது நாட்டில் சுடிதார் பெண்கள் ஆடையாக அங்கீகரிக்கப்பட்ட ஒன்று. பெண்கள் சுடிதார் அணியக்கூடாது என்பது ஒரு தனிமனுஷனுடைய (பாஸ்டருடைய) சுயநீதியை நிலைநிறுத்தும் ஒரு உபதேசமாகும். நாம் தேவநீதியைச் சார்ந்து இருப்போம். மனுஷர்களுடைய சுயநீதி நமக்குத் தேவையில்லை. பாருங்கள், பாஸ்டர் சாமுவேலின் மகள் பள்ளிக்குச் செல்லும் பொழுது அவள் சுடிதார் ஆடை அணிந்தால் அது தவறு இல்லை. ஆனால் பெண்கள் அதை அணிந்து சபைக்கு வருவது தவறு என்கிறார். சுடிதார் அணியக்கூடாது என்றால் அது சிறிய, பெரிய பெண்கள் என்கிற பாகுபாடு இருக்கக்கூடாது. பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்காக சுடிதார் அணியலாமா? இவரது உபதேசம் ஒரு மாய்மாலமாகவே இருக்கிறது. ஆண்களாகிய பாஸ்டர் சாமுவேல் அவர்களும், அவர்களது உபதேசத்தில் நிலைநிற்கும் அவரது சகாக்களும் சுடிதார் ஆடை அணிபவர்களாக இருந்தால் மட்டுமே அவர்களுக்குப் பெண்கள் சுடிதார் ஆடை அணியக்கூடாது என உபதேசிக்க தகுதியுண்டு, மற்றபடியல்ல.

ஈ) ஆடைகள் குறித்து நீங்கள் **மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுதல்** என்னும் செய்தியைப் படியுங்கள். அங்கு மணவாட்டி தங்கள் தங்கள் தேசத்தின் ஆடைகளை அணிந்தவர்களாகக் காணப்பட்டனர். சுடிதார் நமது தேசத்தில் பெண்கள் ஆடைகளில் ஒன்றாகும். ஆதலால் பெண்கள் சுடிதார் அணியலாம். இதில் வாக்குவாதத்துக்கு இடமேயில்லை.

34. சென்னையில் ஒரு சில பாஸ்டர்கள் தங்கள் சபைகளில் கொஞ்சம் எண்ணிக்கை அதிகமுள்ள ஜனங்கள் இருப்பதால், ஏதோ அவர்களை மிகப்பெரிய ஊழியக்காரராகக் கருதிக்கொண்டு, தங்கள் சுயஉபதேசங்களை மக்கள் மீது திணிக்கிறார்கள். இது குறித்து செய்தி என்ன கூறுகிறது?
இன்றைக்கு நமக்குத் தேவையானது அதிகமான உலகப்பிரகாரமான சொத்துக்கள் அல்ல... நமக்குப் பெரிய ஆலயங்கள் அவசியமில்லை, நமக்கு அதிக **அங்கத்தினர்களைக் கொண்ட சபையோ அவசியம் இல்லை.** நமக்கு வானொலியிலும், தொலைக்காட்சியிலும் அதிகமான பிரசங்கங்கள் அவசியம் இல்லை... **நாம் ஆவிக்குரியப் பிரகாரமாக இருக்க வேண்டியதே இன்றையத் தேவை** What we need today to be spiritual. (தேவனைக் குறித்து நிச்சயமுள்ளவர்களாயிருங்கள். பத்தி 21)

35. பிரியமானவர்களே, சபைகளில் கூட்டத்தை நம்பி மோசம் போகாதீர்கள். நீங்கள் சார்ந்திருக்கும் சபை பாஸ்டர் உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், குற்றம் பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் போதிக்கிறவனும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும், தேவ பக்திக்கேற்ற உபதேசங்களையும் போதிக்கிறவனா என்று அறிந்து அந்தச் சபையில் பங்குகொள்ளுங்கள். ஒரு பாஸ்டரிடம் குணமாக்கும் வரம் இருக்கிறது என நம்பி, அவனைச் சார்ந்தும் மோசம் போகாதீர்கள். சில சமயங்களில் விசுவாசமானது பெரிய அற்புதங்களை நடப்பித்து, அது ஆவிக்கரிய இருதயத்திலிருந்து வராமல் இருக்கக்கூடும். மத்.7:21-23. **அந்நாளில்** அந்த நாளில்தான் நாம் வாழ்த்து கொண்டு இருக்கிறோம். (தேவனைக் குறித்து நிச்சயமுடையவர்களாயிருங்கள். பத்தி 20)

36. புறம்பே இருக்கிறவர்களைக் குறித்து தீர்ப்புச் செய்கிறது என் காரியமா? உள்ளே இருக்கிறவர்களைக் குறித்தல்லவா நீங்கள் தீர்ப்புச் செய்கிறீர்கள்? புறம்பே இருக்கிறவர்களைக் குறித்து தேவனே தீர்ப்புச் செய்வார்.1கொரி.5:9-12. ஆகையால் நம் மத்தியில் ஒழுங்கற்று நடக்கிறவர்களை விட்டு விலகுங்கள். **தேவனுடைய உண்மையான ஊழியன் ஒவ்வொருவனும் தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாயிருக்க வேண்டும். நீங்கள் உண்மையாயிராவிட்டால், அதற்கு எதிராக ஒரு சத்தம் எங்கோ கூச்சலிட்டுக் கொண்டிருக்கும். (அவருடைய வருகையின் அடையாளமாகப் பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு. பத்தி 147) ஒருவேளை அதுவே இங்கே கூச்சலிட்டுக்கொண்டிருக்கும் சத்தமாக இருக்குமோ? நானோ எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள், இக்காலத்துக்குரிய செய்திக்குள் தேறினவனாக நிறுத்தும் படிக்கு எந்த மனுஷனுக்கும் புத்திச் சொல்லி, எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறேன். அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன். எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள். அந்தக் குற்றம் அவர்கள் மேல் சுமராதிருப்பதாக. என் ஊழியம் நிறைவேறக் கர்த்தரோ எனக்குத் துணையாக நிற்கிறார்.**

37. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தின விசேஷத்தில் அநேக அடையாளச் சின்னங்கள் உண்டு. Revelation is a book of symbols. இந்த அடையாளச் சின்னங்களுக்கு நேரான பொருள் கிடையாது. ஆனால் உட்பொருள் உண்டு. ஆம், இது சுயதோற்றமான பொருளை உடையது அல்ல. 2பேது1:20. உதாரணமாக வெளி.1:16ல் ஏழு நட்சத்திரங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது ஏழு சபைத்தூதர்கள் ஆகும். வெளி.1:20. மேலும் வெளி.1:13ல் ஏழு குத்துவிளக்குகள் என்று கூறப்பட்டிருக்கிறது. அது ஏழு சபைகளைக் குறிக்கிறது. வெளி.1:20. யோவான் ஏழு நட்சத்திரங்களையும், ஏழு குத்துவிளக்குகளையுமே கண்டான். ஆனால் அதன் பொருள் ஏழு சபைகாலத் தூதர்கள் மற்றும் ஏழு சபைகள் ஆகும். வெளிப்படுத்தின விசேஷத்திலுள்ள காரியங்களை வசனத்தோடு வசனத்தை ஒப்பிட்டு வேதவாக்கியானம் செய்வதை போன்று செய்யமுடியாது. பரிசுத்தஆவியே இதன் பொருளை நமக்கு போதிக்க வேண்டும். வேதவாக்கியங்கள் எல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. 2தீமோ.3:16. தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். 1கொரி.2:11. வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி ஒருவனுடைய மனதை தேவன் திறக்காவிட்டால் அவன் தேவனுடைய வார்த்தையின் கருத்தை அறிந்துகொள்ள முடியாது. அது அவனுக்கு மறைபொருளாகவே இருக்கும். லூக்.9:45, 24:45. அவர் உலகத்துக்குத் தம்மை வெளிப்படுத்தாமல் ஒரு குறிப்பிட்ட சாராருக்கே தம்மை வெளிப்படுத்துகிறார். யோ.14:22; மத்.16:13-17. அவரிடமிருந்து பெற்ற அபிஷேகம் அவனுக்குச் சகலத்தையும் குறித்துப் போதிக்கிறது. 1யோ.2:27.

38. யோவான் ஆவிக்குள்ளாகித் தரிசனம் கண்டான். வெளி.1:10. ஒருவன் ஆவிக்குள்ளானால் மட்டுமே தரிசனம் காணமுடியும். ஒருவன் ஆவிக்குள்ளானால் மட்டுமே தரிசனத்தின் பொருளையும் அறிந்துகொள்ள முடியும். ஆக ஒருவன் ஆவிக்குள்ளாக மறுபடியும் பிறக்கவேண்டும், அதாவது அவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்க வேண்டும். யோ.3:3,5; 1கொரி.2:11,12. ஒருவன் மறுபடியும் பிறக்காவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டான். அதாவது அவன் தேவனுடைய இராஜ்யத்தை அறிந்துகொள்ள முடியாது. ஏனென்றால் தேவனுடைய இராஜ்யம் ஆவிக்குரியது. அது பரிசுத்தஆவி. அதை பார்க்க முடியாது ஆனால் அறிந்துகொள்ள முடியும். Except a man be born again he cannot understand the kingdom of God. அது உங்களுக்குள் (It is in your heart) அது மனுஷனுக்குள் அசைவாடுகிறது. (It is moving in the man) அது மனுஷனை ஆளுகைச்செய்கிறது. (It is governing the man) அது மனுஷனைக் கட்டுப்படுத்துகிறது. (It is controlling the man) மறுபிறப்பு அடையாதவன் தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றி அறிந்துகொள்ளமுடியாது, புரிந்துகொள்ளமுடியாது. அதைப் பார்க்கவும் முடியாது, அதில் பிரவேசிக்கவும் முடியாது. ஏனென்றால் அது பரிசுத்தஆவி. அது மறுபிறப்பு அடைந்தவனுக்குள் இருக்கிறது. அவன் அதைப் பார்க்கமுடியாது. ஆனால் அதை உணரமுடியும்.

39. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்தெழுந்தார் என்று விசுவாசிக்கிறவன், நித்திய ஜீவனை விசுவாசிக்கிறான். ஆனால் அவன் நித்திய ஜீவனை பெறவில்லை. நீங்கள் பரிசுத்தஆவியை பெற்றபின் தான் நித்திய ஜீவனை பெறுகிறீர்கள். ஆனாலும் அநேகர் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொண்டது போல் நடிக்கிறார்கள். தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள். பரிசுத்தஆவியை பெற்றிருக்கிறேன் எனக்கூறிக் கொண்டு ஒரு பாஸ்டர், திருமணம் ஆகாத நிலையில் எப்படி பிரசங்கபீடத்தில் நிற்க முடியும்? எப்படி ஒரு விசுவாசி அவிசுவாசியுடன் சம்பந்தம் கொள்ள முடியும்? முடியாதே! மறுபடியும் பிறப்பது புது சிருஷ்டிப்பு. New born is a new creature. இன்னும் இவர்கள் மறுபடியும் பிறக்கவில்லை. ஆதலால் தான் இவர்கள் தேவனுடைய வார்ததைக்குக் கீழ்படிகிறதில்லை.

40. ஒருவன் மனந்திரும்புகிறான், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு தண்ணீர் ஞானஸ்நானம் பெறுகிறான். ஆனாலும் அவன் இன்னும் குணப்படவில்லை. (Not converted) குணப்படுதல் என்பது முற்றிலும் ஒரு மாற்றம். லூக்.22:32. பழைய மனிதன் மரித்து, அடக்கம்பண்ணப்படாதவரை அவன் உயிர்தெழவில்லை. அவன் குணப்படவில்லை. அநேகர் ஞானஸ்நானத்தில் மரிக்காமல், அடக்கம்பண்ணப்படாமல், தண்ணீரில் மாத்திரம் மூழ்கி எழுந்திருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் மறுபிறப்பு அடையவில்லை. உண்மையான மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலே - புதுவாழ்வு - (New Life) ஆகும். பரிசுத்தஆவியே புதுவாழ்வு.

41. தேவனுடைய இராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டுள்ளது. புறம்பே இருக்கிறவர்களுக்கு அவைகள் உவமைகளாகச் சொல்லப்படுகிறது. ஏனென்றால் அவர்கள் குணமாகாத படிக்கும், அவர்களுக்குப் பாவங்கள் மன்னிக்கப்படாதபடிக்கும் அவர்களுக்கு உவமைகளாக சொல்லப்படுகிறது. மாற்.4:11,12. பாருங்கள், பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் மத்.28:19. அதன் பொருளை அநேகர் அறிந்துகொள்ள முடியவில்லை. ஏன்? அது அவர்களுக்கு அருளப்படவில்லை. புறம்பே இருக்கிறவர்களுக்கு உவமைகளாகச் சொல்லப்படுகிறது. ஆனால் தேவனுடைய இராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி அருளப்பட்டவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுகிறார்கள். அப்.2:38. பெந்தெகொஸ்தே நாளன்று மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார். அப்.2:41,47. பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆகும்.

42. ஸ்திரீயின் நீண்ட தலைமயிர் அவளுக்கு தலைமுக்காடு என்பதை அறிந்துகொள்ள யார் யார் மனது திறக்கப்பட்டதோ அவர்கள் அதை ஏற்றுக்கொள்கிறார்கள். 1கொரி.11:15. மற்றவர்கள் தங்கள் தலையை சேலை முந்தானையாலும், கைக்குட்டையினாலும், தொப்பியினாலும் மூடிக்கொள்ளுகிறார்கள். கர்த்தர் உரைக்கிறதாவது ஒரு ஸ்திரீக்கு அவளது நீண்டத் தலைமயிரே தலைமுக்காடு எனத் தீர்க்கத்தரிசி கூறியதை ஒருவன் அறிந்துகொள்ள முடியவில்லையென்றால் அவன் எப்படி கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு பாஸ்டராக இருக்கமுடியும்?

43. வெளிப்படுத்தின விசேஷம் எதிர்காலத் தலைமுறைக்கு எழுதப்பட்ட ஒரு தீர்க்கத்தரிசனப் புத்தகம். தரிசனம்: நீங்கள் விழித்துக்கொண்டு இருக்கும் போது, ஐம்புலன்களும் வேலை செய்துகொண்டு இருக்கும்

நேரம் சில சம்பவங்களை உங்கள் முன், திரையில் காண்பது போல் காண்பீர்கள். நீங்கள் என்ன நேர்ந்தது என்றும், என்ன நேரிடப்போகிறது என்றும் காண்பவைகளை மற்றவர்களுக்குக் கூறுகிறீர்கள். அது ஏற்ற வேளையில் நடந்தே தீரும். **சொப்பனம்** : நீங்கள் உறங்கும் நிலையில், ஐம்புலன்கள் வேலை செய்யாமல் இருக்கும் போது நீங்கள் எங்கோச் செல்லுகிறீர்கள். எதையோக் காண்கிறீர்கள். பின் சுய நினைவுக்கு வரும் போது நீங்கள் அந்த சொப்பனத்தை/காட்சியை நினைவு கூறுகிறீர்கள். அது முற்றிலும் உண்மையாக இருக்க சாத்தியமில்லை. ஆனால் இங்கு யோவான் கண்டது தரிசனம்.

**44. இங்கு இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடு கொடுக்கப்பட்ட முறையாவது:**
தேவன் கிறிஸ்துவுக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றின வெளிப்பாடு கொடுத்தார்.
கிறிஸ்து தம்முடைய தூதனை யோவானிடம் அனுப்புகிறார்.
தூதன் யோவானுக்குச் சின்னங்களினால் அதை தெரியப்படுத்தினான்.
யோவான் ஆவிக்குள்ளாகி தான் கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்கு பின்பு சம்பவிப்பவைகளையும் எழுதுகிறான். அதாவது நடந்த, நடந்துகொண்டிருக்கிற, நடக்கப்போகிற சம்பவங்களைக் கண்டவிதமாகச் சாட்சியாக எழுதுகிறான். ஏனென்றால் இயேசு கிறிஸ்து இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர்.

45. இப்பொழுது இயேசு கிறிஸ்து அனுப்பிய அந்த தூதன் யார் என்பது ஒரு பெரிய சர்ச்சைக்குரிய காரியமாக நம் மத்தியில் இருக்கிறது. வெளி.19:10 மற்றும் 22:8,9 வசனங்களில் யோவான் பாதத்தில் விழுந்து வணங்கிய தூதன் ஏழாம் சபைக்காலத் தூதனாகிய சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் என்ற உபதேசத்துக்கு அதிக ஆதரவு உண்டு. இது சகோதரருடைய ஊழியத்தை மிகைப்படுத்தும் கூட்டத்தாரின் போதனையாகும். இவ்வாறாக சகோதரரின் ஊழியத்தை மிகைப்படுத்தித் தான் அவரை கிறிஸ்துவாக்கினர். இவ்வாறாக சகோதரனை ஏழாம் சபைக்காலத் தூதன், ஒரு புறஜாதி தீர்க்கதரிசி என்ற அடைமொழிக்கு மேல் மிகைப்படுத்தும் கூட்டத்தாரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அவர்களது நயவஞ்சக வலையில் விழுந்து விடாதீர்கள். இவர்களில் சிலர் எதற்கெடுத்தாலும் செய்தி, செய்தி; தீர்க்கதரிசி, தீர்க்கதரிசி என்பார்கள். எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை முற்றிலுமாக புறக்கணித்துவிடுவார்கள். எதற்கும் ஆதாரமாக செய்தி இப்படிச் சொல்கிறது, அப்படிச் சொல்கிறது என்பார்கள். ஆனால் தேவனுடைய வார்த்தை இப்படி சொல்கிறது என்பது ஒருக்காலும் அவர்கள் வாயில் இருந்து வராது. சிலர் வேதாகமத்தை கைகளில் ஏந்தாமல் **உரைக்கப்பட்ட வார்த்தை** செய்திப் புத்தகங்களை கைகளில் ஏந்திக் கொண்டு பிரசங்கப் பீடத்தில் நின்று பிரசங்கம் பண்ணுகிறார்கள். இவர்கள் எல்லாம் வஞ்சிக்கும் ஆவியினால் வழிநடத்தப்படுகிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். இப்படியாகப் போதித்து வந்தவர்களில் பலர் அவமாய் போய்விட்டார்கள்.

46. ஒரு முறை சென்னையில் ஒரு சபைக்குச் சென்றிருந்தேன். ஒரு விசுவாசியின் திருமண அழைப்பு என்னிடம் கொடுக்கப்பட்டது. அதில் ஒரு பட்டயம் வரைந்து, சகோ.பிரன்காம் படமும் போட்டு கர்த்தரின் பட்டயம், பிரன்காமின் பட்டயம் என்று எழுதியிருந்தது. இது என்ன? தேவனுடைய வார்த்தையில் கர்த்தருடைய பட்டயம் பிரன்காமின் பட்டயம் என்று எங்குமே கிடையாது. மாறாக **கர்த்தருடைய பட்டயம் கிதியோனின் பட்டயம்** நியா.7:18 என்றே உள்ளது. தேவனுடைய வார்த்தை குறைவில்லாதது, முழுமைப்பெற்றது. இந்த எழுத்துக்களோடு எவராவது யாதொன்றைக் கூட்டவோ அல்லது அதிலிருந்து எடுத்துப்போடவோ செய்தால், தேவன் அப்படிப்பட்டவனுடைய பெயரை, பங்கை ஜீவபுத்தகத்தில் இருந்து எடுத்துப்போடுவேன் என்று கூறியுள்ளார். வெளி.22:18,19. **பின்பு ஒரு நாள் சபீனோ மலைக்கணவாயில் தேவன் அதிகாலையில் என்னை அங்கு அழைத்தபோது, நான் கைகளை மேலேயுயர்த்தி ஜெபம் செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு பட்டயம் என் கைகளில் விழுந்தது... அதன் அர்த்தம் என்னவென்று எனக்குப் புரியவில்லை. அது என்னை விட்டுச்சென்றது. அப்பொழுது ஒரு சத்தம் இது ராஜாவின் பட்டயம் என்றது. பின்பு கர்த்தருடைய தூதன் அதை வெளிப்படுத்தித் தந்தபோது, அது என் கரத்தில் தேவனுடைய வார்த்தை என்றறிந்தேன்.** (எக்காளப்பண்டிகை. பக்கம் 12, பத்தி 2) பாருங்கள், **அந்த சத்தம் இது ராஜாவின் பட்டயம் என்றதேயல்லாமல் இது பிரன்காமின் பட்டயம் என்றுக் கூறவில்லை.**

47. இன்னும் சிலர் **ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனும் பிரன்காமின் தேவனுமாகிய** என்று ஜெபம் செய்கின்றனர். இதை நான் சென்னை, பல்லாவரம் சகோ.தங்கமணி சபையில் கண்டேன். இதென்ன? தேவனுடைய வார்த்தையோடு ஒன்றைக் கூட்டுவது. தேவனுடைய வார்த்தை என்ன? தேவன் மோசேயிடம் என்ன கூறினார்? நான் **ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன்** என்றார். யாத்.3:6. தேவனுடைய வார்த்தை எவ்வண்ணமாக இருக்கிறதோ அதிலே நாம் நிலைநிற்போமாக. அதில் கூட்டவும் வேண்டாம், குறைக்கவும் வேண்டாம். இன்று சகோ.தங்கமணி சபை (தேவனுடைய சபையல்ல) நிலை என்ன? ஸ்தாபனசபை ஊழியக்காரர் பிரசங்கபீடத்தில் நின்று பிரசங்கம் பண்ணுகிறார், சாட்சி கொடுக்கிறார். அந்த அளவுக்கு சீர்கெட்ட நிலையில் உள்ளது. ஆனால் இன்றும் சிலர் தங்களை உண்மையான விசுவாசிகள் என அழைத்துக்கொண்டு ஏன் அந்த சாக்கடைக்குள் கிடக்கிறார்கள் எனத் தெரியவில்லை. பொதுவாக தேவனுடைய சபையைக் காண்பது அரிதாக இருக்கிறது. ஆனால் சபைகளோ எங்கும் பரவிக்கிடக்கிறது. இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ள சபைகளில் எங்கும் சாக்கடை நாற்றமே, அந்த நாற்றத்தை விட்டு வெளியேவந்து தேவனுடைய சபையை நாடி, ஓடி, தேடிக் கண்டடையுங்கள்.

48. இப்பொழுது யோவான் வணங்கிய அந்த தூதன் யார் என்று தியானிப்போம்.
அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன். அவன் என்னை நோக்கி: இப்படி செய்யாதபடிக்குப்பார், உன்னோடும் இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சியிட்ட உன் சகோதரரோடும்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள், இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான். வெளி.19:10.

And I fell at his feet to worship him. And he said unto me, see thou do it not! I am thy fellow servant, and of thy brethren that have the testimony of Jesus. Worship God ; for the testimony of Jesus is the spirit of prophecy. Rev.19:10.
கிறிஸ்து தீர்க்கதரிசிகளில் ஒருவனை தன் தூதனாக அனுப்பி, யோவானுக்கு தெரிவிக்கிறார். அந்த தூதன், தான் யார் என்று தன் பெயரை குறிப்பிடாமல் கூறுகிறான். மேற்கூறியத் தகுதிகள் சகோ.பிரன்காமுக்கு உண்டா என்று நாம் தியானிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

49. இப்பொழுது கவனியுங்கள், அந்தத் தூதன் யோவானுடன் உடன் ஊழியக்காரன். யோவான், அப்போஸ்தலன் மற்றும் தீர்க்கத்தரிசி. அந்த தூதன் தன்னை ஒரு தீர்க்கத்தரிசி என்கிறான். பொதுவாக ஊழியத்தில் உள்ளவர்கள் யாவரும் ஒருவருக்கொருவர் தங்கள் பணிகளில் வித்தியாசப்பட்டாலும், அவர்கள் ஒருவருக்கொருவர் உடன் ஊழியக்காரர்கள். ஒரு கம்பெனியில் பலவிதமான பணிகளில் பலர் பணிபுரிகின்றனர். ஆனாலும் கூட்டுமொத்தமாக எடுத்தால் அவர்கள் ஒருவருக்கொருவர் உடன் ஊழியக்காரர்கள். அவ்வண்ணமாகவே இங்கும். ஆதலால் யோவான் அப்போஸ்தலனாக இருந்தாலும் அந்த தூதனுக்கு உடன்ஊழியக்காரன்.

50. மேலும் அவன் இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சியிட்ட உன் சகோதரரோடும் கூட நானும் ஒரு ஊழியக்காரன் என்கிறான். அப்படியானால் அந்த தூதன் இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சியிட்ட யோவானின் சகோதரரோடும் கூட ஒரு ஊழியக்காரன். இங்கு நாம் 1பேது.1:10,11 வசனங்களைத் தியானிக்க மறந்துவிடக்கூடாது. ஏனென்றால் இந்த தூதன், தன்னிலுள்ள கிறிஸ்துவின் ஆவியினால் நமக்கு உண்டான கிருபையைக் குறித்தும், கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்கு பின்வரும் மகிமையையும் முன்னறிவித்த தீர்க்கத்தரிசியாக யோவானின் உடன் சகோதரர்களில் ஒருவனாக இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி தீர்க்கத்தரிசனத்தின் ஆவி. சகோ. பிரன்காம் லவோதிக்கேயா சபை தூதன். ஒரு புறஜாதி தீர்க்கத்தரிசி. இவர் நமக்கு உண்டான கிருபையையும், கிறிஸ்துவுக்கு உண்டான பாடுகளைப் பற்றியும், அதற்கு பின் வரும் மகிமையைப் பற்றியும் தீர்க்கத்தரிசனம் உரைத்த தீர்க்கத்தரிசி அல்ல. மேலும் யோவானுக்கு உடன் சகோதரனும் அல்ல. யோவான் யூதன். பிரன்காம் புறஜாதி. இது குறித்து ரோ.9:3யை வாசியுங்கள். மாம்சத்தின்படி ஒருவன் இனத்தானே அவன் சகோதரன் எனப்படுவான். இது குறித்து அங்கு மோசே, உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கத்தரிசியை உனக்காக உன் நடுவே, உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார் என்றான். உபா.18:15. இதனால் இயேசு, யூத குலத்தில் பிறந்து, ஒரு யூதன் என்றும், கலிலேயாவிலுள்ள நாசரேத் ஊரிலிருந்து வந்த தீர்க்கத்தரிசி என்றும் (மத்.21:11), மாம்சத்தின்படி இஸ்ரவேலன் (ரோ.9:5) என்றும் அழைக்கப்பட்டார். இஸ்ரவேல் ஜனங்கள் யூதர். 2.இரா.16:6.

51. மேலும் வெளி.22:8,9 வசனங்களையும் இங்கு நாம் தியானிப்போம்.
இவைகளை எனக்குக் காண்பித்த தூதனை வணங்கும்படி அவன் பாதத்தில் விழுந்தேன். அதற்கு அவன்: நீ இப்படி செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கத்தரிசிகளோடும், இந்த புத்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவரோடும் கூட நானும் ஒரு ஊழியக்காரன் என்றான்.
I feel down to worship before the feet of the angel who showed me these things. Then saith he unto me, see thou do it not; for I am thy fellow servant, and of thy brethren, the prophets, and of them who keep the sayings of this book.
இங்கும், ஆங்கில வார்த்தையின்படி அந்த தூதன் யோவானுடன் ஒரு உடன் ஊழியக்காரன். நாம் இது குறித்து விளக்கம் முன்பே கண்டோம். இரண்டாவது தீர்க்கத்தரிசிகளாகிய அவன் சகோதரர்களில் இந்த தூதனும் ஒருவன். சகோ.பிரன்காம், யோவானின் சகோதரர்களில் ஒரு தீர்க்கத்தரிசி இல்லை என்பதையும் முன்பு நாம் தியானித்தோம். அடுத்தபடியாக இந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்டவைகளை நாம் ஒவ்வொருவரும் கைக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம். ஒரு தீர்க்கத்தரிசி இதற்கு விதிவிலக்கல்ல. அவனும் இந்த புத்தகத்தில் சொல்லப்பட்டவைகளைக் கைக்கொள்ள வேண்டும், கீழ்படிய வேண்டும்.

52. இந்தப் புத்தகம் இயேசு கிறிஸ்து என்னவாக இருந்தார், இப்பொழுது எப்படி இருக்கிறார், இனி எப்படி இருப்பார்; ஆக இருந்தவர், இருக்கிறவர், வருகிறவருமாகிய இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறது. அதோடு மட்டுமல்ல ஆதி முதல் அந்தம் வரை நடந்தது (கண்டவைகள்), நடந்து கொண்டிருப்பது (இருக்கிறவைகள்), இனி நடக்கயிருப்பது (சம்பவிக்க வேண்டியவைகள்) ஆகிய அனைத்து சம்பவங்களையும் வெளிப்படுத்தி (வெளி.1:19) சரித்திரத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருகிறது.

53. இங்கு தேவன் தம்மை கிறிஸ்து மூலமாக வெளிப்படுத்துகிறார். கிறிஸ்து தேவனை வெளிப்படுத்துகிறார். யோ.14:7,9. பிலிப்பு ஆண்டவரை நோக்கி: பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்றான். இயேசு: என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான். அப்படியிருக்க பிதாவை எங்கிருந்து காண்பிப்பது என்றார். மேலும் இயேசு, பிதாவை அறிந்தும், கண்டும் இருக்கிறீர்கள், என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்றார். யோ.16:7-9. தேவன் தம்மை கிறிஸ்துவில் வெளிப்படுத்தாவிட்டால் தேவன் யார் என்று நாம் அறிந்திருக்க முடியாது. சிலர் திருத்துவத்தை உறுதிப்படுத்த பாருங்கள், மனைவி, புருஷனுடைய எலும்பில் எலும்பும், மாம்சத்தில் மாம்சமுமாயிருக்கிறாள். அவர்கள் (இருவர்) ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஆதி.2:23,24. அவ்வாறாகவே தேவதுவத்தில் மூவர் இருந்தாலும் அவர்கள் ஒன்றாய் இருக்கிறார்கள் என்கிறார்கள். இந்த உபதேசம் தவறு. எப்படியெனில் இங்கு இயேசு: என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்றார். ஆனால் ஒருவன் தன்னைக் கண்டவன் தன் மனைவியைக் கண்டான் என்று கூறமுடியாதே. ஆதலால் அவர்களது உவமானம் திருத்துவத்தை நிரூபிக்க எடுபடாது.

54. இந்தத் தூதன் யார் என்று ஏழாம் சபைகாலத் தூதனிடமே கேட்டபோது: **இதை அவர் தம்முடைய தூதனை அனுப்பி யோவானுக்கு வெளிப்படுத்தினார். அந்த தூதன் யார் என்பது நமக்குத் தெரியாது. அந்த தூதன் யார் என்பதைப் பற்றி வேதமும் ஒன்றும் கூறவில்லை. ஆனால் அந்த தூதன் ஒரு தீர்க்கத்தரிசி என்று நாம் அறிந்திருக்கிறோம்.... அது எலியாவாக இருக்கக் கூடும். தீர்க்கத்தரிசிகளில்**

**ஒருவனாக இருக்கக்கூடும். யோவான் அப்போஸ்தலனாக இருந்தான்** என்கிறார். (இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்ததுதல். பாகம்1, பக்கம்29, பத்தி112,113)

55. இங்கு எலியா என்று சகோ.பிரன்காம் கூறியதால், சகோ.பிரன்காம் எலியாவின் ஆவியை உடையவர் தானே, ஆதலால் அவர் தன்னைத்தான் கூறுகிறார் என கரம் தட்டுகின்றனர். இது ஒரேவிதமான ஊழியத்தைக் குறிக்க எலியாவின்ஆவி என்று அழைக்கப்படுகிறது. **தேவஆவியானவர் வல்லமையாக எலியாவின் மேல் தங்கியிருந்தார். அதே ஆவியானவர் இரட்டிப்பான வல்லமையோடு எலிசாவின் மேல் அமர்ந்தார். நூற்றாண்டுகள் கழித்து இந்த எலியாவின்ஆவி யோவான்ஸ்நானன் மேல் இறங்கியது. புறஜாதிகளின் சபைக்காலம் முடிவடையும் தருணத்தில் எலியாவின்ஆவி ஒரு மனிதன் மேல் இறங்கி அதே விதமான ஊழியத்தைக் கொடுக்கும்.** (ஏழு சபை கால வியாக்கியானம் பக்கம்309, பத்தி2)

56. And the man of the seventh angel messenger at the end of the Laodicean age **will not be the literal Elijah, he will be a gentile to his people.** கே.ப.189. பாருங்கள் சகோ.வில்லியம் மாரியம் பிரன்காம் சொல்லுக்குச் சொல் எலியா தீர்க்கத்தரிசி கிடையாது. இங்கு **எக்காளப் பண்டிகை,** பக்கம் 65, கடைசி பத்தியைத் தியானிப்போம் : ஏழு (கவனியுங்கள்), ஏழு சபைதூதர்கள், ஏழு எக்காளத்தூதர்கள் அனைவருமே தீர்க்கத்தரிசிகள். அது உண்மை. The seven (listen), the seven Church messenger, the seven trumpet messenger is all phophets. Now that's right! இங்கு நன்கு கவனியுங்கள், இங்கு தமிழில் ஏழு சபைத்தூதர்கள், ஏழு எக்காளத்தூதர்கள் அனைவருமே தீர்க்கத்தரிசிகள் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஓ! என் ஜனமே இந்த தமிழ் மொழிபெயர்ப்பை நம்பி மோசம் போகாதீர்கள் எனத் திரும்பத்திரும்ப உங்களை எச்சரித்துக்கொண்டே இருக்கிறேன். தமிழ் மொழிபெயர்ப்பு மிக்க வஞ்சகத்தைக் கொண்டுள்ளது. ஏனென்றால் மொழிபெயர்ப்பாளர்கள், அந்த ஸ்தாபனஅமைப்பு யாவுமே சாத்தானுடைய பிடியில் இருக்கிறது. பாஸ்டர் எட்வர்ட், சகோ.அந்தோணி ஆப்மாவை முக்கிய அங்கத்தினர்களாக இந்த ஸ்தாபன அமைப்பு கொண்டிருக்குமானால், பின் இது எப்படி உருப்படும்? ஐந்துவகை ஊழியத்தில் இருக்கிறோம் என்கிறவர்களுக்கு இந்த ஸ்தாபன அமைப்பில் என்ன வேலை? கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஐந்துவகை ஊழியத்தில் இருக்கிறேன் என்பவர்கள் WBGNSயை விட்டு வெளியே வரவேண்டும். இங்கு தீர்க்கத்தரிசி The seven church messenger, the seven trumpet messenger என, ஏழாம் சபைத்தூதன், ஏழாம் எக்காளத்தூதன் எனக் குறிப்பிடுகிறார். அதாவது ஏழாம் சபைக்காலதூதன், ஏழாம் எக்காளத்தூதன் இருவரும் தீர்க்கத்திரிசிகள் என்கிறார். இப்பொழுது **எக்காளப் பண்டிகை,** பக்கம் 60, பத்தி 3க்கு வாருங்கள். **இந்த சபை ஏழாம் முத்திரையின் இரகசியத்தை அறிந்தவுடன்; யூதர்கள் ஏழாம் எக்காளத்தின் இரகசியத்தினால் அழைக்கப்படுகின்றனர். அது இரண்டு தீர்க்கத்தரிசிகள். எலியாவும் மோசேயும் அவர்கள் திரும்பி வருகின்றனர்.** இங்கு கவனியுங்கள் ஏழாம் எக்காளத்தின் தூதர்கள் எலியாவும், மோசேயும். இப்பொழுது பக்கம் 61, பத்தி 3க்கு வாருங்கள். ஏழாம்தூதனின் செய்தி மணவாட்டியை பெந்தெகொஸ்தே பாரம்பரியங்களில் இருந்து வெளியே அழைத்தது போன்று, இஸ்ரவேலரை யூதர்களுடைய பாரம்பரியத்திலிருந்து வெளியே அழைக்கும். இந்த மோசேயும், எலியாவும் இஸ்ரவேலரை ஆட்டுக்குட்டி, செம்மறியாடு, வெள்ளாட்டுகடா ஆகிய பாவநிவாரண பலியிலிருந்து உண்மையான ஜீவனுள்ள பலியாகிய வார்த்தைக்கு அழைக்க வேண்டும். Jews is called by the mystry of the seventh trumpet which is two phophet, Elijah and Moses. பாருங்கள், இஸ்ரவேலருடைய அழைப்பில் ஏழாம் காலசபைத்தூதனுக்கு இடமில்லை.

57. அடுத்து சகோ.பிரன்காம் ஏழாம் சபைத்தூதன். தேவஇரகசியம் அனைத்தையும் வெளிப்படுத்திவிட்டார். இவருக்குத் தேவன், தேவஇரகசியம் முழுவதையும் வெளிப்படுத்தியிருப்பதால், அவர் தான் அதை யோவானுக்கு வெளிப்படுத்தியிருக்க வேண்டும், யோவான், சகோ.பிரன்காமை தரிசனத்தில் கண்டான் என்கிறார்கள். பாருங்கள், வெளி.1அதி.1வது வசனம் முதற்கொண்டு 22அதி.21வது வசனம் வரை உள்ள தீர்க்கத்தரிசன சம்பவங்களின் பொருள் அனைத்தும் ஏழாம் சபைதூதனுக்கு வெளிப்படுத்தப்பட்டது என்பது தவறு. நிச்சயமாக இல்லை என்பதை நீங்கள் என்னுடன் இணங்கக்கூடும். ஏனென்றால் வேதாகமத்தில் அநேக காரியங்கள் குறித்து சகோ.பிரன்காம் தனக்குத் தெரியாது என்கிறார். ஆதலால் இவர்கள் கூற்றுப்படி அந்த தூதன் நிச்சயமாக சகோ.பிரன்காமாக இருக்க முடியாது. மேலும் அந்த தூதன், தான் யோவானுக்கு வெளிப்படுத்தின அனைத்தையும் அறிந்திருக்கவில்லை. அவ்வண்ணமாகவே யோவானும் அறிந்திருக்கவில்லை. அதாவது வெளிப்படுத்தப்பட்டவைகளின் பொருளை அவர்கள் இருவருமே அறிந்திருக்கவில்லை. யோவானும் தான் எழுதின வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை அது என்னவென்று புரிந்துகொள்ள முடியவில்லை. அதில் எழுதப்பட்டவைகள் யாவும் நிறைவேறி வரலாறு ஆகும் காலம்வரை அவன் உயிர்வாழவில்லை.

58. சகோ.பிரன்காம் ஏழாம் சபைக்காலத்தூதன். மல்.4ம்அதி., வெளி.10:6ல் உரைக்கப்பட்ட இந்த தூதன் இரு பெரிய காரியங்களைச் சாதிப்பார். முதலாவதாக, மல்கியா உரைத்தப்படி, இவர் பிள்ளைகளின் இருதயத்தைப் பிதாக்களிடத்திற்குத் திருப்புவார். இரண்டாவதாக, வெளி.10அதி. கூறப்பட்டிருக்கும் ஏழு இடிமுழக்கங்களின் இரகசியத்தை அதாவது ஏழு முத்திரைகளின் இரகசியத்தை வெளிப்படுத்துவார். தேவனால் அருளப்பட்ட இந்த சத்தியம் பிள்ளைகளுடைய இருதயத்தைப் பெந்தெகொஸ்தே பிதாக்களிடத்திற்குத் திருப்பும். இங்கு ஒரு காரியத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். கர்த்தருடைய தூதர்கள் பிரத்தியட்சமாகி, ஏழு முத்திரைகளின் இரகசியத்தை இவருக்கு வெளிப்படுத்தினர்(**எக்காளப் பண்டிகை** ஜுலை 19, 1964, பக்கம் 13) The Angels of the Lord appeared and told about the seven seals. பாருங்கள், யோவானுக்கு ஒரு தூதன் வெளிப்படுத்தினது போன்று சகோ.பிரன்காமுக்கும் அனைத்து சம்பவங்களையும் தூதர்கள் அனுப்பப்பட்டு அவர்கள் வெளிப்படுத்திக் கொடுத்தனர். எபேசு சபை முதற்கொண்டு பிலதெல்பியாசபை வரை மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுதலை எதிர்பார்த்து தூங்கிவிட்டனர். கடைசி சபையாகிய லவோதிக்கேயா சபையிலும் ஒரு பகுதி தூங்கிவிடுவார்கள். ஆனால் மற்றொரு பகுதி மரணத்தை ஜெயமாக விழுங்குவார்கள். இவர்களுக்குள் எடுத்துக்கொள்ளப்படுதலுக்குரிய விசுவாசத்தைக் கொடுக்க, இவர்களுக்கு என்னென்ன சம்பவங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டுமோ அனைத்தையும் தேவன் ஏழாம் சபைக்காலத்தூதன் மூலமாக சபைக்கு

வெளிப்படுத்துகிறார். இந்த தூதன் எலியாவின் தன்மையும், யோவானின் தன்மையும் உடையவராயிருப்பார். இக்காலத்து மக்களும் ஆகாபின் காலத்து மக்களைப் போன்றும், யோவான் ஸ்நானன் வாழ்ந்த காலத்தின் மக்களைப்போலவும் இருப்பார்கள். பிள்ளைகளுடைய இருதயம் மாத்திரமே பிதாக்களிடத்திற்கு திருப்பப்படுவதால், பிள்ளைகள் தான் அந்த தூதனுக்குச் செவிகொடுப்பார்கள். இவர் லவோதிக்கேயா சபையில் உள்ள மணவாட்டியை எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு ஆயத்தப்படுத்த செய்தியோடு வந்த தூதன். **இந்தச் சபையில் கிறிஸ்துவின் சரீரம் பூரணப்படுகிறது. கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாடு பூரணப்படுகிறது.** ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் சபைகளுக்கும் இஸ்ரவேலருக்கும் மற்றும் பொதுவான சம்பவங்களைக் கொண்டது. சபை பூரணமடைவதற்கான காரியங்களை மட்டுமே தேவன் சகோ.பிரன்காமுக்கு வெளிப்படுத்தினார். இஸ்ரவேலருக்குரிய சம்பவங்களை முற்றிலுமாக அவருக்கு வெளிப்படுத்தவில்லை. ஆனால் யோவானுக்கு வெளிப்படுத்தின தூதன் சபை, இஸ்ரவேலர் மற்றும் பொதுவான சம்பவங்கள் அனைத்தையும் கண்டான், யோவானுக்கு வெளிப்படுத்தினான். யோவான் கண்ட நிகழ் மற்றும் நிகழ்ந்த, நிகழப்போகிற மற்றும் பொதுவான அனைத்து காரியங்களையும் கண்டான். ஆனால் சகோ.பிரன்காம் கடந்த, நிகழ், நிகழப்போகிற அனைத்து சம்பவங்களையும் தரிசனத்தில் கண்டு, அவைகளின் வெளிப்பாடுகளைப் பெற்று சபைக்கு வெளிப்படுத்தினதாகத் தனது செய்திகளில் எங்கும் கூறவில்லை.

59. இவர் அறியாத பலகாரியங்கள் இருந்தன. உதாரணமாக:

அ) ஏழாம் முத்திரையின் போது, கலசங்கள் (Vials) ஊற்றப்படுகின்றன. எல்லாமே அப்பொழுது ஊற்றப்படுகிறது. அவை என்னவென்பதை நான் இதுவரை அறியேன். (நான்காம் முத்திரை, பத்தி 114, மார்ச் 1963) இங்கும் பழையபடி தமிழ் மொழிபெயர்ப்பைக் கவனியுங்கள். தமிழ் மொழிபெயர்ப்பு எப்பொழுதும் கூட்டியும், குறைத்துமே காணப்படுகிறது. இங்கு And everything else are poured out. What they are, I don't know. அவை என்ன என்பதை நான் அறியவில்லை. இதுதான் ஆங்கிலவார்த்தை. இதை தமிழிலில் கூட்டி அது என்னவென்பதை நான் **இதுவரை**அறியேன் என மொழிப்பெயர்க்கிறார்கள். **இதுவரை** என்பதை தமிழ் மொழிபெயர்ப்பில் கூட்டி ஆங்கில வார்த்தையின் அர்த்தத்தையே மாற்றுகிறார்கள்.

ஆ) And the Roman power take the Jewish power of money, breaking the covenant. That might not be so. I know they we'll break it, but I don't know what reason, because it's not revealed to me about what they will do. ரோமசபை யூதர்களோடு ஒரு உடன்படிக்கை செய்து, யூதர்களிடம் உள்ள செல்வங்களை அபகரித்து, பின் உடன்படிக்கையை முறிக்கும் ஆனால் அந்த உடன்படிக்கை முறிக்கப்படுவதற்கான காரணம் தமக்கு வெளிப்படுத்தப்படவில்லை என்கிறார். இவ்வாறாக சகோ. பிரன்காமுக்கு வேதாகமத்தில் வெளிப்படுத்தப்படாத அநேகக் காரியங்கள் உண்டு. சபை பூரணப்படுவதற்கு தேவையான அனைத்துக் காரியங்களும் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது. அதுவே உண்மை. ஏனென்றால் அவர் ஏழாம் சபைக்காலத்தூதன்.

60. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதலை குமாரனாகிய கிறிஸ்து தூதனாகிய காபிரியேலுக்கும், காபிரியேல் தூதன் யோவானுக்கும், யோவான் பரிசுத்தஆவியின் மூலம் தான் கண்டதை சபைக்கு சாட்சியாக அறிவித்தான் என **யோவானின் வெளிப்படுத்தின விசேஷ விளக்கம்** என்ற நூலில் காட்பாடியைச் சேர்ந்த சகோ.பி.ராஜுபத்மநாதன் என்பவர் எழுதுகிறார். அவன் தன்னுடைய அந்த புத்தகத்தை பரிசுத்தஆவியின் ஏவுதலால் எழுதி தேவனுடைய பிள்ளைகளுக்கு வெளியிடக் கட்டளைப் பெற்றேன் என்கிறார். பாருங்கள், அந்த தூதன் எப்படி தேவதூதனாகிய காபிரியேலாக இருக்க முடியும்? காபிரியேல் தேவதூதன் எப்படி யோவானுக்கு உடன்ஊழியக்காரனாக இருக்க முடியும்? எப்படி அவன் ஒரு தீர்க்கத்தரிசியாக இருக்க முடியும்? எப்படி நமக்கு உண்டான கிருபையைக் குறித்தும் தன்னிடத்தில் உள்ள கிறிஸ்துவின் ஆவியினால் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும் அவைகளுக்குப் பின் வரும் மகிமையையும் முன்னறிவித்த தீர்க்கத்தரிசியாக இருக்க முடியும்? தேவதூதர்கள் இரட்சிப்பை சுதந்தரிக்கப்போகிறவர்களின் நிமித்தமாக ஊழியம் செய்யும்படிக்கு அவர்கள் எல்லோரும் தேவனால் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாய் இருக்கிறார்களே. எபி.1:14. ஆதலால் அந்த தூதன் காபிரியேல் தேவதூதன் என்பதை ஆவியானவருடைய வெளிப்பாடு என்று கூறமுடியாது. ஆக அவரது புத்தகம், அவர் தனது லௌகீக ஞானத்தைக் கொண்டு எழுதினதாகும்.

61. பல எழுத்தாளர்கள் அந்தத் தூதனை தேவதூதனோடே ஒப்பிடுகிறார்கள். சகோ.பிரன்காம் உபயோகித்து வரும் Scofield Reference Bible லில் கூட அந்த தூதனை தேவதூதனோடு ஒப்பிட்டு இருக்கிறது. ஆனாலும் அது தவறு. அவன் யோவானின் சகோதரர்களில் ஒரு தீர்க்கத்தரிசி என்பது அதிநிச்சயம்.

62. வெளி 1ம் அதி. முதல் 16 அதி. வரை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், 17ம் அதி.முதல் 22ம் அதி. வரை ஏழு வாதைகளையுடைய தூதர்களில் ஒருவன் யோவானுக்கு வெளிப்படுத்தினான் என்று எண்ணுவதும் தவறு. உதாரணமாக வெளி முதல் அதி.யில், வசனங்கள் 10 முதல் 18 வரை உள்ள சம்பவங்களை யோவான் பிரத்தியட்சமாக காணவில்லை. யோவான் மனுஷகுமாரனுக்கு ஒப்பானவரை பிரத்தியட்சமாகக் கண்டு செத்தவனைப் போல் அவர் பாதத்தில் விழவில்லை. மாறாக யோவான் ஆவிக்குள்ளாகி தரிசனத்தில் அவைகளைக் காண்கிறான். இதை இயேசு கிறிஸ்து தம்முடைய தூதனை அனுப்பி யோவானுக்கு காண்பிக்கிறார். அந்த ஒரே தூதனே வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்டுள்ள அனைத்துச் சம்பவங்களையும் யோவானுக்குக் காண்பிக்கிறான்.

63. இப்பொழுது செபெதேயுவின் குமாரனாகிய யோவான் ஒரு செம்படவன். வேதசாஸ்திர பயிற்சி எதுவும் இல்லாதவன். அவன் ஒரு கல்விமானும் அல்ல. இவனுடைய ஆவிக்குரிய பயிற்சியெல்லாம் இயேசுவுடன் 3½ ஆண்டுகள் இருந்ததாகும். இவனை இயேசு **பொவர்னகெஸ்** என்று அழைத்தார். அதற்கு இடிமுழக்கத்தின் மகன் என்று பொருள். யோவான் தான் கண்டதை எழுதின ஒரு வேதபாரகன். இந்த தீர்க்கத்தரிசனப் புத்தகத்தை ஆக்கியோன் யோவான் அல்ல. அவன் கண்ட தரிசனங்களைக் கொண்டு, இந்தப் புத்தகத்தை எழுதினான். இது இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்திக் காண்பிக்கும் ஒரு புத்தகம்.

அதோடு மட்டுமல்ல தீர்க்கத்தரிசன வசனங்களைக் கொண்ட ஒரு புத்தகம். இந்த புத்தகத்தை எழுதும் போது அவன் பத்மு தீவில் இருந்தான். அப்போஸ்தலர்களுடைய நிருபங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து ஒரு வேதமாக்க முயன்றபோது ரோமசாம்ராஜ்யம் அவனைப் பிடித்து பத்மு தீவுக்கு நாடுகடத்தியது. யோவான் வேதவசனங்களின் நிமித்தமும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி நிமித்தமும் சிறைப்பட்டான். வெளி.1:9. சிறை அதிகாரிகள் யோவானை எண்ணெய் கொப்பரைக்குள் முழுக்கி, கொப்பரையை 24 மணி நேரமாக சூடுபடுத்தி எண்ணையைக் கொதிக்க வைத்தனர். அதில் அவன் இறந்துவிடுவான் என்று அவர்கள் எண்ணினர். ஆனால் யோவானோ மரிக்கவில்லை. ஆதலால் அவனை மந்திரவாதி என்று குற்றம்சாட்டி ரோமசக்கரவர்த்தியாகிய டொமிட்டியன் (Emperor Domitian) என்பவரால் பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டான். அவன் கி.பி.95-97வரை இரண்டு ஆண்டு காலமாக இந்த தரிசனத்தைப் பெற்றான். தன்னுடைய கடைசி காலங்களை எபேசு பட்டணத்தில் கழித்தான். அங்குள்ள சபைக்கு போதகனாய் இருந்து தன்னுடைய 100வது வயதில் இயற்கை மரணம் அடைந்தான். இவன் தான் தரிசனத்தில் கண்ட யாவற்றையும் சாட்சியாக வெளிப்படுத்தின விசேஷத்தில் அறிவிக்கிறான். கிறிஸ்து தம்முடைய மரணத்துக்கும், உயிர்தெழுதலுக்கும் பின்பு அவருடைய மத்தியஸ்த ஊழியத்தின் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தம்மை வெளிப்படுத்தினார். அதோடு மட்டுமல்ல சாத்தானுடைய முடிவையும் வெளிப்படுத்தினார்.

64. யோவான் இயேசுவுக்கு மிக அன்பான சீஷன். இறுதி இராப்போஜனவேளையில் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டிருந்த சீஷன். யோ.13:23. இயேசு தம்முடைய பாடு மரணவேளையில் தம்முடைய தாயை இந்த சீஷனிடமே ஒப்புக்கொடுத்தார். இந்த சீஷனும் அவளை தன்னிடமாய் ஏற்றுக் கொண்டான். யோ.19:26. **இயேசு, இவனைக் குறித்து நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா என்று பேதுருவிடம் கூறினார்.** யோ.20:20-24. இதன் அர்த்தம் என்ன? இயேசு மீண்டும் வரும் வரைக்கும் நடக்கயிருக்கும் சம்பவங்கள் அனைத்தையும் தரிசனமாக யோவான் தன் கண்களினால் கண்டான். ஆம், தேவன் தம்முடைய இரட்சிப்பின் முழுத்திட்டத்தையும் படிப்படியாக அவனுக்குத் தரிசனத்தில் காண்பித்தார். ஆம், வெளி.1ம்அதி.1ம் வசனம் முதல் வெளி.22ம்அதி.21ம் வசனம் வரை கூறப்பட்டுள்ள அனைத்து சம்பவங்களையும் தரிசனமாக அவன் தன் கண்களால் கண்டான். ஆதலால் தான் இயேசு நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன என்றுக் கூறினார். இந்த தரிசனங்கள் அனைத்தையும் சகோ.பிரன்காம் காணவில்லை. அவைகள் அனைத்தின் வெளிப்பாடுகளையும் அவர் பெறவில்லை.

65. நான் ஏழு எக்காளங்களைக் குறித்துப் பிரசங்கிக்க வேண்டிய கட்டத்துக்கு வந்தபோது நான் **ஒன்றுமே யோசிக்கமாட்டேன், நான் நேரம் வரும்வரை காத்திருப்பேன், அவர் அதை எனக்கு வெளிப்படுத்தித் தரட்டும்** என்று எண்ணினேன். நேற்று நான் அறைக்குள் சென்று (மன்னிக்கவும், அது நேற்று முந்தின நாள் - நான் அறைக்குள் சென்று அதைப்புரிந்துகொள்ள முற்பட்டது) ஏனென்று வியந்தபோது, அங்கு பரிசுத்தஆவி அதைத் திறந்து, இந்த நேரத்தில் சபைக்கு அது உபயோகம் இல்லை. ஏனென்றால் அதற்கும் சபைக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்பதைக் காண்பித்தார். **(எக்காளப் பண்டிகை** பக்கம் 13, பத்தி 2)

66. இந்தத் தீர்க்கத்தரிசன வசனங்களை வாசிக்கிறவன், கேட்கிறவர்கள், இதில் எழுதியிருக்கிறதைக் கைக்கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள். தீர்க்கத்தரிசிக்குள் கிறிஸ்துவின் ஆவி 1பேது.1:11. தீர்க்கத்தரிசனம் தேவனிடத்தில் இருந்து வரவேண்டும். ஆதலால் அவரே அதன் ஆக்கியோன். ஏசா.44:7,8; 45:21. தீர்க்கத்தரிசனம்: காலத்தின் விசேஷம் இன்னதென்று முன்னறிவிக்கிறது. 1பேது.1:11. சுயதோற்றமானப் பொருளை உடையது அல்ல.2பேது.1:20. தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்தஆவியினால் ஏவப்பட்டு பேசினார்கள். 2பேது.1:21.

67. பழைய ஏற்பாடு காலத்தில் அனைவருக்கும் படிப்பறிவு கிடையாது. ஆசாரியன் கர்த்தருடைய வசனத்தை வாசிக்க, சபையோர் கேட்பார்கள். உபா.31:11. இந்த தீர்க்கத்தரிசன புத்தகம் ஆசீர்வாதத்துடன் ஆரம்பமாகிறது. வெளி.1:3. ஆனால் சாபத்துடன் முடிகிறது. வெளி.22:18,19. இதிலுள்ளவற்றோடு எதையாகிலும் கூட்டவோ அல்லது இதிலிருந்து எடுத்துப்போடவோ செய்வோருக்கு சாபத்தை உடையதாக இருக்கிறது. ஏனென்றால் அது தானே முழுமையான பிரமாணமாக இருக்கிறது.

68. காலம் சமீபமாயிருக்கிறது. ஒவ்வொரு சபைக்காலத்திலும் அக்காலத்துக்குரிய தேவனுடைய இரகசியத்தின் வெளிப்பாடு பொதுவாக காலத்தின் கடைசி நேரத்தில் வெளிப்படும். அப்பொழுது அந்த சபையின் காலம் சமீபமாயிருக்கும். அதாவது தேவஇரகசியம் வெளிப்படும்போது அந்த சபைக்காலம் மிக சமீபமாயிருக்கும். ஒவ்வொரு சபைக்காலத்தினூடாகவும் இயேசு கிறிஸ்துவைப் பற்றின வெளிப்படுத்தல் பூர்த்தியடையும் போது, இக்காரியங்கள் சம்பவிக்கையில், காலம் சமீபமாயிருக்கிறது. இக்காலமானது (லவோதிக்கேயா) எல்லா காலங்களின் முடிவாக இருக்கிறது. அரசியல் உலகத்தின் முடிவில் நாம் இருக்கிறோம். எல்லாம் முடிவடையும் தருவாயில் இருக்கிறோம். லௌகீக காரியங்கள் எல்லாவற்றின் முடிவிற்குள் நாம் வந்துவிட்டோம். முடிவில்லாத ஒன்றுக்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

69. யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தின் இந்த முகவுரைப் பகுதியைச் சாட்சியாக அறிவிக்கிறவர் மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

*மார்ச், 2003*

*கிறிஸ்துவின் அன்பில்,*
*சகோ.காலேப் யோசுவா.*